Regd. No. M. 4900. 16-பக்கங்கள். தனிப்பிரதி விலை 0-2-0.

# குடி அரசு

எல்லாவித
அச்சு வேலைகளும்
சிறந்த முறையில்
செய்து தரப்படும்.
★
தமிழன் பிரஸ், ஈரோடு.

வருட சந்தா உள்நாடு ரூ. 7-0-0. வெளிநாடு ரூ. 9-0-0.

மாலை 21 ஈரோடு 24-1-1948 சனிக்கிழமை மலர் 20.

## இதைக் கேட்பதா நாஸ்திகம்?

★

உருவமில்லாத ஒரு கடவுளை ஒழுக்கமான கடவுளைக் காசு செலவில்லாமல் வணங்குங்களேன்! எங்கும் நிறைந்திருக்கும் பராபர வஸ்துவை நீ ஏன் 1½ முழ குழவிக் கல்லில் அடக்கி வைக்கப்பார்க்கிறாய்? அவருக்கேன் 10 கலம் சோறு? அவர் ஒரு பருக்கையாவது தின்கிறாரா? ஒரு பருக்கைகூட உட்கொள்ளாத அந்தக் குழவிக் கல்லுக்கு அஜீர்ணத்துக்குச் சுக்குக் கஷாயம் வேண்டுமென்கிறாயே, அதன் அர்த்தம் என்ன? அஜீர்ணம் ஆனால் அவர் மல ஜலம் கழிக்கக் கக்கூஸ் கட்டி வைத்திருக்கிறாயா? இதைக் கேட்பதா நாஸ்தீகம்?

பெரியார் ஈ. வெ. ரா.

★

கதைப் பகுதி.

# பரம்பரைக் குணம்.

(சீலன்)

★

மயனூர் தேவஸ்தான ஆபீஸ் கடிகாரத்தில் மணி 10 அடித்தது. எங்கும் இருள்சூழ்ந்து பயங்கரமான நிசப்தம் குடிகொண்டிருந்தது. அவ்விரவில் கோவில் கர்ப்ப கிரகத்தில் குடியிருக்கும் வௌவால்களில் சில அங்குமிங்கும் பறந்துகொண்டிருந்தன. தேவஸ்தான ஆபீஸ் ஹெட் கிளார்க் ஒரு 'கொட்டாவி' விட்டுக்கொண்டே சிவன் கோயிற் பட்டர் சதாசிவ அய்யரின் வருகைக்காகக் காத்துக் கொண்டிருந்தார். சதாசிவ அய்யரும் தேவஸ்தான ஆபீஸை நெருங்கி வந்து கொண்டிருந்தார். ஆபீஸ் வாசலுள் நுழையுமுன்பே, தம் மடியில் கள்ளத்தனமாகப் பதுக்கி வைத்திருந்த 5 ரூபாய் நோட்டைத் தடவிப் பார்த்துக் கொண்டார். பின்பு ஹெட் கிளார்க் ரெங்கசாமி நாயுடுவின் முன் வந்து நின்றார்.

"என்னங்க, பட்டரே! இன்னிக்குப் பூஜை வரும்படி எவ்வளவு வந்தது?"

"இன்னிக்குக் காலம்பற பூஜைக்கு ரூபா பதினஞ்சு வந்தது. சாயரக்ஷை அந்திப் பூஜையிலே ரூபா பத்து. அர்த்த ஜாமப் பூஜையிலே ரூபா எட்டு ஆக மொத்தம் முப்பத்திமூணு ரூபா ரொக்கம் வந்தது. உண்டியல்லே வேற ஸ்தோத்திரக்காணிக்கை அநேகம் பேர் போட்டுண்டு போனா"

"என்னாங்க, பட்டரே! இன்னிக்கு முழுவதுமே இவ்வளவு தானா வருமானம் வந்தது?"

"நான் தான் சொல்லீண்டிருக்கேனே ஸார்! ரொக்கமா வந்தது இவ்வளவு தான். அப்பறம் நைவேத்யத்திற்கு நெய் முறுக்கு, தேங்குழல், தேங்கா—பழம், சர்க்கரைப் பொங்கல் இதுகளுமா கொஞ்சம் வந்தது. கொஞ்சம் பேர் உண்டியல்லே பணம் செலுத்தினா"

"அது சரி, தேங்கா—பழம், நெய் முறுக்கு இதெல்லாம் நம்ப அள-இராஅருணாசலம் செட்டி மளிகைக்கடையில் கொடுத்தீரே. நமக்கு என் பணம் குறைவாக கொடுத்தனுப்பிச்சுருக்கிர்?"

"நான் என்ன பண்றது, ஸார்! அந்தச் செட்டி அவ்வளவு தான் கொடுப்பேன். இல்லாட்டி போனா நம்ப இதுகளை வெளியிலே விக்கிறதை வெளியே அம்பப்படுத்திடுவானாம். சூத்திரப்பய இப்படிப் பயமுறுத்துறான். காலம் கலிகால மோல்லியோ!"

"அது சரி, நம்ப கோயில் நந்தி கழுத்திலே இருந்த தங்கமணி களவு போயிடுச்சே, அதைப் பற்றி ஏதாவது துப்புத் துலங்குகிறதா?"

"அது என்னாமா தெரியும் ஸார்! திருடீண்டு போறவன் எல்லோருக்கும் தெரியுறாப் போலவா திருடீண்டு போவான்?"

"அது கிடக்கட்டும், பட்டரே! அதைப்பற்றி உமக்கு யார்மேலாவது சம்சயம் தோணுறதா? வெளியிலிருக்கிறவர்களெல்லாம் நம்மைத்தான் சந்தேகிக்கிறார்கள்"

"எனக்கு யார் மேலயும் சந்தேகம் இல்லே. கொஞ்ச நாளா நம்ப கோயில் சேவகன் சுப்பா நாயுடு சூனாமானா மாதிரி பேசிண்டு திரியிறான். அது தான் தெரியும். களவாடீண்டு போனவாளை நம்ப சிவபெருமான் சும்மா விட்டுடுவாறா? அவனைக் கருவறுத்துட மாட்டாரா!"

"சரி, போயிட்டு வாரும். நேரமாகிறது"

"நான் போயிட்டு வரட்டுங்களா? ஸார்"

"சரி"

ஹெட்-கிளார்க் ரெங்கசாமி நாயுடு ஒரு அய்ந்து ரூபாய் நோட்டைத் தம் கோட்டுப் பையில் திணித்துக்கொண்டு ரூ 28 என்று கணக்கெழுதி விட்டு ஆபீஸையும் மூடிவிட்டு, வீட்டுக்குப் போய் விட்டார்.

* *

அன்று ஆட்கொண்டானுக்குத் திருக்கல்யாணம். ஆட்கொண்டான், இது தான் மயனூரில் எழுந்தருளியிருக்கும் சிவபெருமானின் திருநாமம். கோவிலினுள் நாதஸ்வரங்கள் 'தீ......தீ' என்று இன்னோசை எழுப்பின. மத்தளங்கள் 'திடம் திடம்' என்று முழங்கின. இவ்விரு ஒலிகளும் சேர்ந்து கேட்போருக்கு 'தீ திடம்' என்று கோவிலின் உண்மை நிலையினை விளக்கின. வெளியே வேட்டுகள், காசைக் கரியாக்கும் இம்மூட மானிடரை 'முட்டாள்' என்று வெடித்துப் பழித்தன. வாணவேடிக்கைகளில் மேலெழும்பிச் சிதறிப் பல வர்ண ஜாலங்களாக மாறி மறைந்த காட்சி, அற்பநேர ஆடம்பரத்திற்காக உற்சவம் வைத்துப் பணத்தை விரயமாக்கும் வீணர்களின் மந்தமதியைப் பழித்தது. பக்தர்கள் ஆண்டவனைச் சிரமேற் கை கூப்பி மெய் மறந்து வழிபட்டனர். முதலில்லா வியாபாரிகள் (திருடர்கள்) தங்கள் வேலையை ஜரூராகச் செய்து கொண்டிருந்தனர். அதேபோது இரு ஜீவன்கள் கோவிலின் இருட்டடைந்த ஓர் பகுதியிலே தனியாகப் பேசிக் கொண்டிருந்தன.

"தாமோதர்! நேக்கு அப்பா கல்யாணம் பண்ணிடப்போறாளாம். அதுக்காக வேண்டிய ஏற்பாடெல்லாம் செய்துண்டிருக்கா. நேத்திக்குத்தான் சிவகாமு மாமி எங்காத்துக்கு வந்து சீர் வரிசை, வரதக்ஷிணை எல்லாத்தையும் முடிவு பண்ணீட்டுப் போறா. மாப்பிள்ளை பி. எ. வரைக்கும் வாசித்திருக்கானாம். வர்ற சித்திரையிலே ஒரு நல்ல முகூர்த்தமும் நாளும் குறிச்சுட்டா. நம்ம தலைவிதி இவ்வளவு தான்" என்று கண்ணீர் விட்டாள் சரஸ்வதி.

"என்ன, சரசு! இதற்காகவா நீ இப்படி அழுகிறாய். உன் அப்பாவுதான் வரதக்ஷிணை கொடுக்கவும், நகை, சீர் வரிசை முதலியன செய்யவும் முடியாத நிலையிலிருக்கிறாரே! பின் எப்படி இப்போது பணம் கிடைத்து விட்டது, உனக்கு விவாகம் செய்ய?" என்று கேட்டான் தாமோதரன்.

"உங்கப்பாவும், எங்கப்பாவும் செய்துண்டு வர்ற சங்கதி தெரியாதோன்னா? அவா ரெண்டுபேரும் கோயில் பணத்துலே ஆளுக்குக் கொஞ்சம் களவாடிண்டு வர்றா. இப்படித் தினமும் நடந்துண்டிருக்கு. இதுனாலே எங்கப்பாவுக்கு இருபதுனாயிரம் ரூபா சேந்துடுச்சு. பத்தும் பத்தாததிற்கு நம்ம கோயில் நந்தி கழுத்துலேருந்த தங்கமணியை வேறே களவாடி எனக்குச் 'செயின்' செய்து போட்டுட்டார். இந்தா, பார் இந்தச் செயினை" தனது கழுத்தில் கிடந்த ஆறு பவுன் தங்கச் 'செயினை'க் காட்டினாள் சரஸ்வதி.

"ஓஹோ! அப்படிச் சொல்லு. என்னடான்னு பார்த்தேன்! எங்கப்பாவுக்கும் பணம் இப்படித்தான் சேர்ந்ததோ? சரி. இதெல்லாம் உனக்கு எப்படித் தெரியும்?"

"மொதமுதல்லே எனக்குச் செயின் செய்து போட்றப்போ, 'ஏதுமமா இந்தச் செயின்?' என்று கேட்டேன். அதுக்கு அவா 'நம்ப அப்பா கோயில்லேருந்து எடுத்துட்டு வந்தா'ன்னு சொன்னா. நானும் விடலை. ஓயாமல் கேள்வி மேல் கேள்வி போட்டுண்டே போனேன். அவளும் உள்ள விஷயத்தை ஒளியாமல் சொல்லிட்டா. வேற ஒருத்தரிட்டையும் இதைச் சொல்லிடாதே!"

"அதுசரி, சரசு! நடந்தது நடந்து விட்டது. இனி மேல் நடக்கவேண்டிய காரியத்தைப்பார்ப்போம். எனக்கு ஒரு யோசனை தோணுது. நாம் இரண்டு பேரும் எங்காவது ஓடிப்போய் எப்படியாவது பிழைத்துக் கொள்வோம் வருகிறாயா?"

"என்னா தாமோதர்! உனக்குக்கூட சாஸ்திர சம்பிரதாயங்கள் தெரியலையே. நம்ப மனு சாஸ்திரத்துலே சூத்ராளை பிராமணாள் கல்யாணம் செய்

[தொடர்ச்சி 15ம் பக்கம்]

ாய்ச்சி நூலக அறக்கட்டளை

# சுயபுத்தியும் இல்லை; :: :: சொல்புத்தியும் இல்லை!

## தோழர் ஜி. டி. நாயுடு விருந்தின் போது அளித்த மருந்து!

★

(சென்ற வாரத் தொடர்ச்சி)

பின்னர், நமது சென்னை சர்க்கார் மூலம் மத்திய சர்க்காருக்கு மனுச் செய்து மோட்டார் கார்களும், மின்சார மோட்டார்களும் இங்கே தயாரிக்கத் திட்டமிட்டு, அத்தொழிலின் லாபத்தில் நூற்றுக்குப் பத்து வீதமே கமிஷனாகத் தயாரிப்போருக்குச் செல்லுமாறு ஏற்பாடு செய்து பொருளுதவி செய்யக்கோரியிருந்தேன். அத்திட்டத்தின்படி இப்போதுள்ள மாதிரியில் தயாராகுங் கார்கள்—குறிப்பாக லாரிகளும் பஸ்களும்—ஒரு குறிப்பிட்ட, சுமார் 20 ஆண்டுகள் வரை நிராகரிக்கப்பட வேண்டியதில்லை. மின்சார மோட்டார்கள் உயர்ந்த சக்தியுடனும் குறைந்த விலையுடனும் நேர்த்தியான முறையில் — அய்ரோப்பாவுக்குக் கூட ஏற்றுமதி செய்யக்கூடிய முறையில் தயாரிக்கக்கூடும். சமீபத்தில் இந்நகரிலுள்ள தொழிற்சாலையில் தயாராகும் அம்மாதிரியான மோட்டாருக்கு விற்பனையாளராயிருக்கக்கோரி ஒரு அய்ரோப்பியக் கம்பெனியார் எனக்கு எழுதியுள்ளனர்.

மேற்கூறியவாறு பொருளுதவி கோரிய இரண்டு விண்ணப்பங்களும் என்னவாயின? மோட்டார் தொழிற்சாலை ஆரம்பிக்கவேண்டி நான் விண்ணப்பித்த பின்னர் மனுச் செய்த சில வடநாட்டு ஆலைகள் இப்போது பொருளுதவியும், லைசன்சும் பெற்றுத் தொழில் தொடங்கிக் கார்களை ஏராளமாய் உற்பத்தி செய்து விரைவாக விற்பனை செய்கின்றன. இவ்வாலைகளுக்குப் போதிய அவகாசத்தை அளித்த பின் ஓராண்டு கழித்து மத்திய சர்க்கார் "தங்கள் திட்டத்தில், தயாரிப்போருக்குக் கமிஷனை இன்னும் குறைக்க முடியாதா?" என்று கேள்வி விடுத்துள்ளனர்.

ஆரம்ப காலத்தில், சர்க்கார், இயந்திரசாதனங்களைவாங்கஆகாயவழியில்கூட என்னை அயல்நாட்டுக்குச் செல்லக்கேட்டிருந்தும், இப்போது என் இயந்திர ஆயுதத் தயாரிப்புத் திட்டம் ஆன கதி தான் தெரியவில்லை. இந்த இரண்டு சம்பவங்களிலிருந்தும் சர்க்கார் என் கோரிக்கைகளை விரும்பவில்லை என்றே கருதுகிறேன். இந்த இயந்திர ஆயுதத் தயாரிப்புத் தொழிலில் டெக்னிகல் டைரக்டரின் சம்பளம் மாதம் 10,000 ரூபாய் என்று நான் கேட்டிருந்தால் ஒரு வேளை சர்க்கார் சம்மதித்திருக்கலாம். இந்நேரம் தொழிலும் நடந்து கொண்டிருக்கலாம். ஆனால் டெக்னிகல் டைரக்டருக்கு மாதம் ரூ. 1 சம்பளத்துடன் என்னை நானே மலிவாக்கிக்கொண்டதால் சர்க்காரால் இது கவனிக்கப்படவில்லை. அதுபோலவே மோட்டார் உற்பத்தித் தொழிலிலும் தயாரிப்போருக்கு நூற்றுக்கு 2 அல்லது 3 வீதம் கமிஷன் போதுமென்றோ அல்லது கமிஷனே வேண்டாமென்றோ நான் கூறியிருந்தால் இத்திட்டத்தைச் சர்க்கார் அங்கீகரித்திருப்பார்கள். அப்போது நான் மறைமுகமாக நூற்றுக்கு 20, 30 வீதம் லாபத்தில் கவர்ந்திருக்கக்கூடும். இவை மனிதனுடைய மனச்சாட்சிக்கு விரோதமானவை எனினும் தற்கால நடைமுறைக்கு இம்முறையில் பொருளீட்டல் குற்றமல்லவென்றே எண்ணுகிறேன். இங்கே நான் சில ஆரம்பக் குறிப்புகளையே கூறியிருக்கிறேன். ஆனால் நாம் எப்படி நமது ஏராளமான செல்வத்தையும், ஒவ்வொரு துறையிலும் நமது பண்புகளையும் இழந்து வருகிறோமென்பதையும், சர்க்கார் எப்படித் தவறான பாதையில் நடத்தப்படுகிறது என்பதையும் எடுத்துக் காட்ட விரும்பினால் நாட்கணக்கில் கூற முடியும். பிரதமரும் தொழில் மந்திரியும் மேலும் உண்மைகளை அறிய விரும்பும்போது நான் எடுத்துக்கூறத் தயாராயிருக்கின்றேன்.

பம்பாயிலும், கல்கத்தாவிலும் ஏற்கனவே மூன்று மோட்டார் கார்உற்பத்திச்சாலைகள் தொடங்கப்பட்டதாயும், மேலும் இரு உற்பத்திச்சாலைகள் மத்திய மாகாணத்திலும், சென்னையிலும் தொடங்க இருப்பதாயும் அண்மையில் செய்தித்தாட்களில் கண்டேன். சென்னை மாகாணத்துக்கு இத்துறையில் எவ்விதமான உதவியளிக்க மத்திய சர்க்கார் எண்ணியிருக்கிறதோ எனக்குத் தெரியாது. ஒரு வேள்ள சில பம்பாய் முதலாளிகள் சென்னையில் இத்தொழிலை ஆரம்பிக்க விண்ணப்பித்தால் மத்திய சர்க்கார் விரைந்து உதவுமென்பதில் தடையில்லை. ஆனால் இதை ஒரு சென்னை வாசி எதிர்பார்க்க முடியாது. நான் இச் செய்தியைப் பத்திரிகைகளில் கண்டவுடன் பிரதமருக்கு எழுதி மத்திய சர்க்கார் சூழ்ச்சி செய்யுமுன், சென்னை வாசிகளே இத்தொழிலைத் தொடங்க ஆவனவற்றை விரைவாகச் செய்ய வேண்டினேன்.

நான் இப்போது தொழில் மந்திரியாரைக் கேட்டுக்கொள்வதெல்லாம், இந்தத் தொழிற்சாலை பொது மக்கள் ஒத்துழைப்புடன் சென்னையிலேயே சர்க்காரால் தொடங்கப்படவேண்டும் என்பதே. இதன் மூலம் நம் நாட்டுச் சொத்து விரயமாவதை நாம் தடுக்கலாம். போக்குவரவுச் சாதனங்களைத் தேசியமயமாக்குதல் என்ற பேரால் நம்நாட்டுச்சொத்து நமது பிரதமரும், மற்ற மந்திரிமார்களும் அறியாவண்ணம் வீணாகி வருகிறது. நீங்கள்

## அறிவிப்பு.

பெரியார் அவர்கள் தொடர்ச்சியான சுற்றுப் பிரயாணத்திலிருப்பதால் உண்மை இராமாயணம் நாடகப் பகுதி வெளியிட முடியவில்லை. வாசகர்கள் பொறுத்துக் கொள்ள வேண்டுகிறோம்.

(ஆ-ர்)

மோட்டார்கார்களும், மின்சார மோட்டார்களும் உற்பத்தி செய்யும் இத்தொழிலை உடனே சென்னையில் தொடங்கிப், பின் சில காலஞ் சென்று, போக்குவரவு சாதனங்களைத் தேசிய மயமாக்கினால் இந்த இரண்டின் வருவாயைக் கொண்டு நல்ல காரியங்கள் செய்யவும், யுத்தபிற்கால சீரமைப்புத் திட்டத்திற்காகும் செலவில் ஒரு பகுதியை நிரப்பவும், உதவியாகும். அன்றியும் மற்ற தொழில்களுக்கு இன்றியமையாததான இயந்திர ஆயுத உற்பத்திச் சாலையையும் உடனே தொடங்கலாம்.

நமது "மார்க்கெட்"டிலிருந்து அந்நிய ஆதிக்கம் ஒழியவும், வீண் விரயங்களை ஒழிக்கவும், ரேடியோ தொழிற்சாலை, க்ஷவரக்கத்தித் தொழிற்சாலை இன்னும் இது போன்ற பிற தொழிற்சாலைகளை விரிவாக்கவேண்டும். ரேடியோ, மின்சாரக் கருவிகளில் ஓரளவு வேலை இப்போது நடந்து வருகிறது. ஆனால் இத்தொழில்களை பிறநாட்டு அனுபவசாலிகளையும், நம் நாட்டு அனுபவசாலிகளையும் கொண்டு மேலும் மேலும் விரிவுபடுத்தாவிடில் விரைவில் பெருத்த நஷ்டம் ஏற்படும்.

அடுத்தபடியாக "ஆர்தர் ஹோப் பாலிடெக்னிக்" சார்பாக அதில் இயந்திர—மின்சார எஞ்சினீரிங் பகுதிகளைத் தொடங்க நமது தொழில் மந்திரியாரின் அனுமதி கோர இச்சந்தர்ப்பத்தை நான் பயன் படுத்திக்கொள்ளுகிறேன். ஆனால் சில காலத்துக்கு முன் அளித்த நன்கொடைகளை இப்போது அளிக்க இயலாதென்பதையும் தெளிவுபடுத்தி விடுகிறேன். எல்லாச் செலவுகளையும் சர்க்காரே ஏற்கவேண்டும். மாகாணத்தின் பொதுநலனுக்காகத் தன் கடமையைச் செய்வதைச் சர்க்கார் உணர்வது அவசியம். மேலும் இது தர்ம காரியமல்ல. நாடு முன்னேற இன்றியமையாத—மிக அவசியமான ஒரு காரியமாகும்.

வருங்காலத்தில் நமது தொழில் மந்திரியாருக்கும் எனக்கும் உத்தியோக முறையில் சில அவநம்பிக்கைகள் சந்தேகங்கள் உண்டாகலாம். அண்மையில் எனது போக்குவரத்துக் கம்பெனியில் ஒரு பகுதியை அதன் ஊழியர்களே நடத்துமாறு விட்டு விட்டேன், சில விஷயங்களில் இப்போக்குவரத்துத் துறையில் ஒரு ஆலோசகனாக மட்டுமிருந்து வருகிறேன். உண்மையில் நான் அவர்களுக்குப் பொருளுதவியும் அளித்து வருகிறேன்; ஏனெனில் அவர்களுக்குப் பொருளுதவியளிக்கும் மார்க்கம் வேறில்லை. இந்தக் கம்பெனியில் சென்ற 28 ஆண்டுகளாக ஆரம்ப முதல் இதுவரை ஒரு வேலை நிறுத்தங்கூட நடைபெற்றதில்லை. இன்னும் அந்தத் தொழிலாளர்கள் தங்களுக்குள் ஒற்றுமையாய் ஒத்துழைத்து வருகின்றனர். இவர்கள் வேலை நிறுத்தம் செய்ய முயற்சித்ததில்லை; அதைப் பற்றி அறிந்ததுகூட இல்லை. இம்மாதிரியான ஒத்துழைப்பாலும், பரஸ்பர நம்பிக்கையினாலும் அவர்கள் ஒவ்வொருவரும் தனித்தனியே சுதந்தரத்துடனும் நல்ல நிலைமையிலும் வாழ்கிறார்கள். நூற்றுக்குப் பதினோரு பேர் தவிர இவர்களில் மற்ற யாருக்கும் கடனோ பிறதொந்தரவுகளோ கிடையாது. மாறாக இவர்களிற் பெரும்பான்மையோர் நிலம், பணம் அல்லது நகை மூலமாக சில சொத்துக்களும்பெற்றிருக்கிறார்கள். மேலும் இதைத்தவிர, தமது வேலையிலும் நடவடிக்கைகளிலும் சிறந்து விளங்குகிறார்கள்.

வெளியிலுள்ளவர்களுக்கு இந்த ஸ்தாபனத்தின் நிலைமை மிகவும் துன்பமும், கொடுமையும், கடுமையும் நிறைந்ததாகத் தோன்றும். ஆனால் உண்மையில் இந்த ஸ்தாபனம் சமதர்ம அடிப்படையில் அமைந்துள்ளது. சமீபத்தில் இதன் ஊழியர்களிற் சிலர் சட்ட விரோதமாக தொழிற் சங்கத்தில் சேர்ந்ததை முன்னிட்டு வேலையிலிருந்து விலக்கப் பட்டனர். இதன் உண்மைகளை அறியாத தொழிற் சங்கத் தலைவர்களிற் சிலர் என்னைப் பொது மேடைகளில் திட்டியதோடு, விலக்கப்பட்டவர்களை மீண்டும் சேர்க்க வேண்டுமெனச் சர்க்காரை அணுகுகின்றனர். மேலும் அவர்களை நான் உடனே வேலையில் சேர்த்துக் கொள்ளாவிடில் தக்க நடவடிக்கை (அது எப்படிப் பட்டதோ அறியேன்!) எடுப்பதாகவும் கூறிவருகின்றனர். இந்த ஸ்தாபனத்தின் நடவடிக்கைகளில் எனக்குத் தொடர்பில்லை. யாவும் சட்டப்படியே நடைபெறுகின்றன. வழக்கப்படியும், மற்ற சந்தர்ப்பங்களில் செய்தது போலவும், சர்க்கார்—இல்லை—தொழில் மந்திரியாரே விலக்கப்பட்ட தொழிலாளரை மறுபடி சேர்த்துக் கொள்ள வேண்டுமென வற்புறுத்தலாம். இது முடியாதது. ஸ்தாபனமும், விட்டுக் கொடுக்காது. இதுசம்பந்தமாய் மந்திரியார் என்னைக் குற்றம் சாட்டினாலும் நான் ஒத்துக் கொள்ளவோ, விட்டுக் கொடுக்கவோ இயலாது. இங்குகூட எங்களிடையே தப்பெண்ணம் வளரலாகும். ஆயினும் இத்தப்பெண்ணத்தின் காரணமாகவே தொழில் மந்திரியார் என்யோசனைகளையும், பொது மக்களின் சார்பான வேண்டுகோட்களையும் கைவிடமாட்டாரென்றே திண்ணமாய் நம்புகிறேன். சர்க்கார் பழிதீர்த்துக் கொள்ள இதுதான் பழமையான ஒரு வழக்கம். ஆனால் நமது தொழில் மந்திரியார் இதற்கெல்லாம் அப்பாற்பட்டவரென்று யான் உள்ளபடியே எண்ணுகிறேன்.

உணவுக்கட்டுப்பாடு, விவசாயம் இவற்றைக் குறித்து இப்போது பல பத்திரிகைகளில் படித்து வருகிறேன். ஏராளமாய் பொருள் நஷ்டப்பட்டு உணவுப் பொருள்களை வெளிநாடுகளிலிருந்து இறக்குமதி செய்வதைவிட, விவசாயிகளுக்கு அப்பணத்தை உதவியாக அளித்து நம் மாகாணத்துக்குப் போதுமான அளவு விவசாயத்தை விருத்தி செய்யலாம் எனச்சில நல்ல யோசனைகள் கூறப்படுகின்றன. பஞ்சத்தைத் தடுக்க வேண்டுமானால் சர்க்கார் உடனடியாக எல்லா விவசாயிகளும் ஓராண்டுவரை உணவுப் பொருள்களைத் தவிர வேறெதுவும் பயிரிடக் கூடாதென உத்தரவிட்டு, உணவு தானியங்களின் விலைக் கட்டுப்பாட்டையும் ஒழித்திருக்க வேண்டும். அதனால் உணவுப் பங்கீட்டு முறை வேண்டுமென்றோ, கட்டுப்பாடு ஒழிய வேண்டுமென்றோ, பொது மக்கள் கூச்சலிட மாட்டார்கள். விவசாயிகள் கண்டிப்பாக உணவு தானியங்களைத்தான் பயிரிட வேண்டுமென்னும் சட்டம் வராமல் கட்டுப்பாடு ஒழியுமானால் மீண்டும் உணவுப் பிரச்னை நெருக்கடி விளைவிக்கும் என்பது உறுதியாகும்.

மேலும் தற்போதுள்ள விவசாய இலாக்கா அத்தொழிலுக்கு ஏற்ற, தகுதியான மக்களைக் கொண்டதாகத் திருத்தி அமைக்கப்பட வேண்டும். இப்போதுள்ள

(தொடர்ச்சி 13-ம் பக்கம்)

ரோஜா முத்தையா ஆராய்ச்சி நூலக அறக்கட்டளை

# நான்குவித அடிமைத்தனம்

(மயிலை. சீனி வேங்கடசாமி)

★

ஒரு இனத்தாரையோ அல்லது ஒரு தேசத்தாரையோ அடிமைப்படுத்துவது எப்படி? நான்கு விதமாக அடிமைப்படுத்தலாம். அவை: 1. அரசியல் அடிமைத் தனம். 2. பொருளாதார அடிமைத்தனம். 3. பாஷை அடிமைத்தனம் 4. சமயத்தில் (மதத்தில்) அடிமைத்தனம் என்பன. இவற்றைச் சுருக்கமாக விளக்குவோம்.

**1. அரசியல் அடிமைத்தனம்:—** ஒரு இனத்தாரை அல்லது ஒரு தேசத்தாரை மற்றொரு இனத்தார் அல்லது தேசத்தார் ஆட்சி செய்வது. அதாவது ஒரு இனம் அரசியல் சுதந்தரத்தை இழந்து மற்றவருடைய ஆட்சிக்கு அடிமைப்பட்டிருப்பது. உதாரணம் ஆங்கிலேயர் இந்தியரை ஆட்சி செய்து வந்தது. ஆங்கிலேயன் வேறு தேசத்தில் இருந்து வந்தவனான படியாலும் அவனுடைய பாஷை, கலை, ஆசாரம் முதலியவை வேறுபட்டிருந்தபடியாலும் இந்த அரசியல் அடிமைத்தனத்தை மக்கள் நன்கு தெரிந்து கொண்டனர். ஆனால் இப்போது சுதந்தரம் கிடைத்து விட்டதாகப் பேசப்படுகிறது; எழுதப்படுகிறது. உண்மையில் நமக்குச் சுதந்தரம் இருக்கிறதா? நாம் அரசியல் அடிமைத்தனத்தில் இருந்து விடுபட்டோமா? நமக்குச் சுயாட்சி கிடைத்துவிட்டதா?

இல்லை. வெள்ளையன் ஆட்சி மாறிவிட்டது. அந்த இடத்தில் வேறு அன்னியன் அமர்ந்து ஆட்சி செய்கிறான். அவன் நமது தேசத்திலேயே இருந்து கொண்டு இந்து மதத்தவன் என்று சொல்லிக்கொள்கிறபடியால், இவனை "நம்மவன்" என்று மயங்கிக் கிடக்கிறார்கள் மக்கள். இவன் வடநாட்டான். தேசியம் என்னும் போர்வையில் புகுந்து கொண்டு தேசிய வலையை வீசி மயக்கி விட்டபடியால் நமது மக்கள் சுதந்தரம் பெற்றுவிட்டதாக நினைத்துக்கொண்டு மயங்கிக்கிடக்கிறார்கள். உண்மையில் நமது நாட்டுக்குச் சுதந்தரம் இருக்கிறதா? நமது மந்திரிகள் சிறு சிறு காரியத்துக்கும்கூட வடநாடு சென்று வரங்கேட்டு வருகிறார்களே. அவர்கள் உத்தரவை எதிர்பார்க்கிறார்களே. வெள்ளைக்காரன் ஆட்சியில் இருந்த சுதந்தரம்கூட நமது மந்திரிகளுக்கு இல்லையே. போலீஸ் இலாகா என்னுடையது என்று தலைமை மந்திரி கூறினால்; இல்லை, கூடாது அதைச் சுப்பராயனிடம் கொடு என்று வடநாட்டான் உத்தரவுபோடுகிறான். நமது தலைமை மந்திரி தலை வணங்கி உத்தரவுப்படி நடக்கிறார். இதுபோல பல உதாரணங்களைக் காட்டலாம். இது சுயராஜ்யமா? அடிமைத்தனமா? நமது மாகாண விஷயத்தில், மிகச் சிறிய விஷயத்தில் இப்படி இருக்கிறது என்றால், மற்ற விஷயங்களில் எப்படியிருக்கும்? இது சுயராஜ்யம் என்றால், வடநாட்டானுக்குச் சுயராஜ்யமேதவிர மற்றவர்களுக்கு அடிமைத் தனம்தான். நமது வாசகர்கள் இந்த அரசியல் அடிமைத்தனத்தை நாள்தோறும்பார்த்தும் கேட்டும் படித்தும் வருகிறபடியால் இந்த அடிமைத்தனத்தைப் பற்றி அதிகமாகச் சொல்லவேண்டியதில்லை. மக்கள் இப்போது இதை உணர்ந்து வருகிறார்கள்.

**2. பொருளாதார அடிமைத்தனம்:-** இந்த அடிமைத் தனத்தைச் சாதாரண மக்கள் தெரிந்துகொள்வது சிறிது கஷ்டமானது. ஆழ்ந்த அறிவும் கூர்மையான புத்தியும் உள்ளவர்களுக்குத் தான் இந்த அடிமைத் தனம் இன்னதென்று புலப்படும். பாங்கிகள் அமைத்தல், மூலதனத்தைப்போட்டு தொழிற்சாலை, வியாபாரம், முதலியவைகளை நடத்துதல் முதலியவைகளின் மூலம் ஒரு நாட்டாருடைய பொருளை இன்னொரு நாட்டார்கொள்ளை கொண்டு போவார்கள். இவ்வாறு கொள்ளை கொடுத்துக் கொண்டிருக்கும் நிலைமைதான் பொருளாதார அடிமைத் தனம் என்பது. அரசியல் அடிமையாகவுள்ளவர்களிடத்தில் தான் பொருளாதார அடிமைத் தனமும் இருக்க முடியும். உதாரணமாக வெள்ளையன் நம்மை அரசியலில் அடிமைப்படுத்தியிருந்தான். அரசியல் அதிகாரம் பெற்றிருந்தபடியால் அவன், பெரிய பெரிய வியாபாரம், ஆலைத் தொழில், பாங்கிகள் முதலியவைகளை இங்கு எற்படுத்தி நமது நாட்டுப். பணத்தைக் கொள்ளை கொண்டு போனான். நமது திராவிட நாட்டைப் பொறுத்த வரையில் நமது பொருளாதார அடிமைத்தனம் இப்போது இருமடங்காகி விட்டது. அதாவது முன் இருந்ததைவிட திராவிட நாடு இருமடங்கு பொருளாதார அடிமைத்தனத்தில் சிக்குண்டு கிடக்கிறது. வெள்ளையன் பாங்கிகளும், வடநாட்டான் பாங்கிகளும் நமது நாட்டில் பெருகி விட்டன. இந்தப் பாங்கிகளில் நமது நாட்டுப் பணம் குவிகிறது: இந்தப்பணத்தை முதலாக வைத்து வடநாட்டான் வியாபாரம், தொழிற்சாலை முதலியவைகளை உண்டாக்கிக் கொள்கிறான். திராவிட நாட்டில் வட நாட்டு வியாபாரம் பெருகிவிட்டது; இன்னும் பெருகிக்கொண்டேபோகிறது. தொழிற்சாலைகளும் வடநாட்டிலேயே அதிகப்படுகின்றன. வடநாட்டு மார்வாடிகளும், குஜராத்திகளும், பனியாக்களும் நமது நாட்டில் வந்து பெரிய பெரிய வியாபாரங்களையும் தொழிற்சாலைகளையும் பாங்கிகளையும் ஏற்படுத்திக்கொண்டு கொள்ளை லாபம் அடிக்கிறார்கள். சென்னையில் பெரிய பெரிய ஹோட்டல்களையும் அவர்களே நடத்தி வருகிறார்கள். ஆகவே, வடநாட்டான் திராவிட நாட்டை வியாபாரச் சந்தையாக வைத்துக்கொண்டான்.

இதைத் தடுக்க நமது "சுயராஜ்யம் பெற்ற" தேசிய மந்திரிகளால் முடியவில்லை. ஏனென்றால் இவர்களைத் தடுக்க "பூர்ண சுயராஜ்யம்" பெற்ற காங்கரஸ் மந்திரிகளுக்கு அதிகாரம் இல்லை. அதிகாரம் வடநாட்டு மத்திய அரசாங்கத்தினிடம் இருக்கிறது! இதிலிருந்து நமது மந்திரிகள் அமர்ந்து ஆட்சி செய்யும் பீடம் சுதந்தர பீடம் அல்ல; அடிமைத் தனம் என்பது விளங்குகிறதல்லவா? அரசியல் அதிகாரம் இல்லாத மந்திரிகளுக்கு வடநாட்டு முதலாளிகள் திராவிட நாட்டைச் சுரண்டுவதைத் தடுக்கவும் அதிகாரமில்லை. நம்மவர்கள் வடநாட்டு வியாபாரிகளுடன் போட்டி போட்டு வியாபாரம் செய்ய முடிவதில்லை. ஏனென்றால், அரசாங்கத்தாரின் உதவியிருந்தால்தான் மற்ற நாட்டாரோடு போட்டியிட வியாபாரிகளுக்கும் முதலாளிகளுக்கும் முடியும். அரசாட்சி அதிகாரம் வடநாட்டானிடம் இருப்பதால் அவன் வடநாட்டு முதலாளிகளுக்கும் வியாபாரிகளுக்கும் சலுகை காட்டுகிறான். தென்னாட்டாரை அவன் மதிப்பதில்லை. திராவிட நாட்டைத் தான் அவன் தன்னுடைய மார்க்கட்டாக (சந்தைக் கடையாக) வைத்திருக்கிறானே! ஆகவே, திராவிடராகிய நாம் அரசியலில் மட்டும் அடிமையல்ல; பொருளாதாரத்திலும் அடிமைப்பட்டிருக்கிறோம். இதை, தேசிய திராவிடத் தோழர்கள் இப்போது தான் உணரத்தொடங்கியிருக்கிறார்கள்.

**3. பாஷை அடிமை:—** பாஷையின் மூலமாகவும் ஒரு இனத்தாரை இன்னொரு இனத்தார் அடிமைப்படுத்தலாம். ஒரு தேசத்தாரை அடிமைப்படுத்த வேண்டுமானால் "முதலில் அவர்களுடைய பாஷையை அழித்துவிடு" என்று ஒரு ஆங்கிலேயன் எழுதியிருக்கிறான். பாஷைக்கும் அதைப் பேசும் மக்களுக்கும் மிக நெருங்கிய தொடர்புண்டு. பாஷை அழியுமானால் அதை மக்களே அழித்துவிடுவார்கள். இதற்குச் சரித்திரத்தில் இருந்து சான்றுகள் காட்டக்கூடும். விரிவஞ்சிவிடுகிறோம். மக்கள் பேசும்பாஷையை அழித்துவிட்டால்,

அல்லது அதற்குக் கொடுக்கவேண்டிய முக்கியத்துவத்தைக் கொடுக்காமல் புறக்கணித்துவிட்டு, வேறு பாஷையை அந்த இடத்தில் வைத்து விட்டால், அந்த மக்கள் தங்களை அறியாமலே அன்னியருக்கு அடிமையாகி விடுகிறார்கள். பாஷை சுதந்தரத்தை இழந்து விட்டவர்கள் மேன்மையடைய முடியாது. பாஷையடிமைத்தனத்தினால் உண்டாகும் தீமையைச் சாதாரண மக்கள் உணர்ந்து கொள்ள முடியாது. மிக நுட்பபுத்தியும் சரித்திர அனுபவமும் உள்ளவர்களே இதனை அறிவார்கள்.

இங்கிலாந்து தேசத்திலே, இங்கிலீஷ், அரசாங்க பாஷையாக இல்லாதபடி புறக்கணிக்கப்பட்டு, பிரெஞ்சு பாஷையும் லத்தீன் பாஷையும் அரசாங்க பாஷையாக இருந்த காலத்தில், ஆங்கிலேயர் உயர்நிலை அடைய முடியவில்லை. ஏனென்றால் அன்னிய பாஷை அரசாங்க பாஷையாக இருந்தது. கி. பி. 14-ஆம் நூற்றாண்டின் பிற்பகுதியில் இங்கிலீஷ் பாஷை அரசாங்க பாஷையாக்கப்பட்டு பார்லிமெண்டு சபையில் பேசப்பட்ட பிறகுதான் ஆங்கிலேயர் முன்னேற்றமடைந்தார்கள். இது சரித்திரம் படித்தவர்கள் அறிந்த விஷயமே.

நமது நாட்டில், (வட நாட்டவருக்கு அடிமைப் பட்டவர்களால்) இந்தி பாஷை கட்டாய பாடமாக்கப்பட்டபோது, நம்மவர் தீவிரமாகவும் பலமாகவும் எதிர்த்து நின்று ஆண் பெண் குழந்தைகள் உட்பட 1500 பேர் சிறையும் சென்றார்கள். தாலமுத்து, நடராசன் என்னும் இருவர் உயிரையும் கொடுத்தார்கள். கடைசியில் கட்டாய பாடம் என்பது ஒழிந்துவிட்டது. இது உலக சரித்திரத்திலேயே எங்கும் நிகழாத அரிய நிகழ்ச்சி. இது நமது நாட்டுச் சரித்திரத்தில் பொன் எழுத்துக்களால் எழுதப்படும்.

ஆனால், அதே இந்தி பாஷையை நமது நாட்டிலே புகுத்த இப்போது பலவித முயற்சிகள் நடைபெற்று வருகின்றன. தேசிய மாய்கையில் இருக்கிற நமது அரசாங்கம், சுதந்தரம் இல்லாத அடிமை அரசாங்கம் ஆதலால், நமது மந்திரிகளுக்கு அரசியல் சுதந்தரமும் பொருளாதார சுதந்தரமும் இல்லாமல் வடநாட்டாருக்கு அடிமைப்பட்டிருப்பதால், இவர்களே இந்தியை நமது நாட்டில் புகுத்த முயற்சி செய்கிறார்கள். கட்டாய பாடம் அல்ல இஷ்ட பாடம் என்று கூறுகிறார்கள். ஆனால் மறைமுகமாகக் கட்டாயமாகப் படிக்கும்படி வற்புறுத்துகிறார்கள். அதுவும் ஹைஸ்கூல்களிலே பாடமாக வைத்திருக்கிறார்கள். காலேஜ் வகுப்புகளில் இஷ்டமாக வைப்பதை நாம் தடுக்கவில்லை. ஹைஸ்கூல்களில் பாடமாக வைப்பது கண்டிக்கத்தக்கது.

வடநாட்டானுடைய ஆதிக்கம் அரசியலில் மட்டுமன்று, பொருளாதாரத்திலும் பலப்பட்டிருக்கிறது. போதாக்குறைக்கு தேசப்பொதுப்பாஷை என்னும் பெயரால் இந்தி பாஷையையும் புகுத்திக் கொண்டிருக்கிறான். இந்தத் துரோகச் செயலைக் கண்டிக்காமல் நமது மந்திரிகள் இதற்கு உடந்தையாக இருக்கிறார்கள். மொழி வளம் இல்லாத இந்தி பாஷை நமக்கு எதற்கு? இஷ்டமுள்ளவர்கள் தனிப்பட்ட முறையில் படித்துக் கொள்ளட்டுமே. அன்னிய பாஷை ஆதிக்கத்தினால் நாட்டு மக்களுக்கு ஏற்படும் தீங்குகளை நம்மவர் இன்னும் அறியவில்லை. அறிந்து கொள்வதும் கடினமானது. சாதாரண மக்களால் தெரிந்து கொள்ள முடியாது. முதிர்ந்து ஆழ்ந்த அறிவுடையவர்க்கே இதன் தீங்கு நன்கு புலப்படும். தேசியத் தோழர்கள் இதனை எப்போது உணர்வார்களோ!

**4 மத அடிமை:-** எல்லா அடிமைத்தனத்தையும்விட இது மிக் மிகக் கீழ்த்தரமானது. மீள முடியாதது. இதன் தீமையை உணரவும்முடியாது. ஒரு கூட்டம் கடவுள் பெயரால் மக்களைப் பிரித்து வைத்து இருப்பது மட்டும் அல்லாமல் அடிமைத்தனத்திலும் ஆழ்த்தி வைத்திருக்கிறது. மதம் என்னும் மயக்கத்தில், போதையில், சிக்கினவர்கள் பெரிய பட்டதாரிகளாயிருந்தாலும் படிப்பாளிகளாயிருந்தாலும் பாமரர்களாயிருந்தாலும் அதன் தீங்குகளை உணர்வது மிக மிகக் கடினம். அரசியல் அடிமை, பொருளாதார அடிமை, பாஷை அடிமை இவைகளில் இருந்து மீளவும் கூடும். ஆனால், மத அடிமைத்தனத்தில் இருந்து மீள்வது மிக மிக துர்லபம். மதத்தின் பேரால் அடிமைப்பட்டுக்கிடக்கும் மக்கள் நமது நாட்டில் கோடானு கோடிபேர். கோயிலில் சுவாமிக்குக்கிட்டே இருக்கும் கூட்டம் சிறிது; எட்ட நிற்பவர் கூட்டம் அதைவிடப் பெரிது, இன்னும் தூரத்தில் நிற்கும் கூட்டம் அதைவிடப் பெரிது; கோவிலுக்கு வெளியே நிற்கும் கூட்டம் இன்னும் பெரிது. இவ்வாறு ஒரு சிறு கூட்டம் பெருங் கூட்டத்தினரை மதத்தின் பெயரால் அடிமைப் படுத்தியிருப்பது நமது நாட்டிலேதான். ஜாதியின் பெயரால், வழக்கத்தின் பெயரால், ஆசாரத்தின் பெயரால் மக்கள் அடிமைப் படுத்தப் பட்டுள்ளனர். இவை யாவும் மதம் (சமயம்) என்னும் சொல்லில்அடங்கிவிடுகின்றன. இந்த உலகத்திலே, சமத்துவம் என்னும் சுதந்தரத்தைக் கொடுக்காத மதமும் சுவாமிகளும், செத்த பிறகு எங்கேயோ மோட்சம் கொடுக்கும் என்பதை எப்படி நம்புவது?

சைவ வைணவம் என்னும் நமது இந்து மதத்தில், மத அடிமைத்தனம் மட்டுமல்ல, இன்னொரு அடிமைத்தனமும் இருக்கிறது. அது என்னவென்றால் மொழி (பாஷை) அடிமைத்தனம். கோயில்களில் சமஸ்கிருதத்தில்தான் பூஜைகள் நடைபெறுகின்றன. இது நமக்குப் புரியாத பாஷை. கோயிலிலே எல்லோரும் ஒரே இடத்தில் இருந்து வணங்கச் சமத்துவம் இல்லை என்றால், அதாவது சமத்துவ சுதந்தரம் இல்லை என்றால், அங்கேயே பாஷை சுதந்தரமும் இல்லை. சமய அடிமைத்தனமும் பாஷை அடிமைத்தனமும் இரண்டும் கோயிலில் இருக்கின்றன. வடநாட்டான் தேசியத்தின் பெயரால் இந்தியை நுழைத்து வருகிறான். பார்ப்பான் சமயத்தின் பெயரால் அன்னிய பாஷையாகிய சமஸ்கிருதத்தை நுழைத்து விட்டான். ஆகவே திராவிடர்களுக்குஇரண்டுபாஷை அடிமைத்தனம் ஏற்பட்டிருக்கிறது.

வாசகர்கள் தயவு செய்து சிந்தித்துப் பார்த்து முடிவு செய்ய வேண்டும். தென்னாட்டுத் திராவிடராகிய நமக்கு உண்மையிலேயே அரசியல் சுதந்தரம் இருக்கிறதா? பொருளாதாரத்தில் சுதந்தரமுண்டா? பாஷை சுதந்தரம் இருக்கிறதா? கோயில்களில் கடவுள் வழிபாட்டில் சமத்துவ சுதந்தரம் இருக்கிறதா? மனிதனுக்கு வேண்டியவை இவை நாலும்தானே. இவை இல்லாத "சுய ஆட்சி' நமக்கு ஏன்? இதற்காகவா தேசியத் தோழர்கள் சிறை சென்றார்கள்? அடிபட்டார்கள், தியாகம் செய்தார்கள்? சிந்தித்துப் பாருங்கள். தீமை என்று மனதில் பட்டால் இவற்றை ஒழித்து உண்மைச் சுதந்தரம்பெறச் செயலில் இறங்குங்கள்.

---

## ஏஜண்டுகளுக்கு!

வழக்கமாக வாங்கிக் கொண்டிருக்கும் காப்பிகளைக் காட்டிலும் அதிகமாகத் தேவைப்படுகின்ற ஏஜண்டுத் தோழர்கள், ஒவ்வொரு வாரத்திலும் புதன்கிழமைக்குள்ளாகவே அறிவித்தால் தான், தேவையை நிறைவேற்ற முடியும்.

மானேஜர் "குடி அரசு".

## வரி கொடுக்கும் ராஜ்ஜியம் சுயராஜ்ஜியமா?

ரோஜா முத்தையா

# ★ பட்டினி நாடகம்! ★

(தேள்ளுமணி)

★

ஜனவரி 12.

"நாளை முதல் போஜனத்துடன் உண்ணாவிரதம் ஆரம்பிக்கிறது. கால நிர்ணயமில்லை. வெறும் தண்ணீரையோ உப்புக்கலந்த தண்ணீரையோ சாப்பிடுவேன். புளிப்பு எலுமிச்சைப் பழத்தைச் சாப்பிடுவேன். எல்லா வகுப்புகளிடையேயும் மீண்டும் ஒற்றுமை ஏற்பட்டு விட்டதென்று எனக்குத் தோன்றியவுடன் உண்ணாவிரதம் நின்று விடும். அவ்வொற்றுமை வெளி நிர்ப்பந்தமின்றிக் கடமையை உணர்வதிலிருந்து ஏற்பட வேண்டும். ஆசியாவிலும் அதன் மூலமாக உலகத்திலும் இந்தியாவுக்கிருந்து வரும் பெருமையும் சுதந்தரமும் வேகமாக மறைந்து கொண்டே வருகிறது. அவற்றைத் திரும்பப்பெறுவதே இதன் மூலம் நாம் பெறும் வெகுமதியாகும்."

ஏன் எப்போழுது?

இது அந்தராத்மாவின் அருந்துணையைப் பெற்ற காந்தியார் தமது 15வது உண்ணாவிரதத்தை ஏன் தொடங்குகிறேன்என்பதைக் குறித்து. உண்ணாவிரதத்திற்கு முதல் நாள் நாட்டு மக்களுக்கு அறிவித்த அறிவிப்பு. உண்ணாவிரதம் எப்பொழுது நிற்கும்?

அ. இந்து--முஸ்லீம்—சீக்கியர் ஆகிய வகுப்புகளிடையே மீண்டும் ஒற்றுமை ஏற்பட்டு விட்டதென்று எனக்குத் தோன்றியவுடன் உண்ணாவிரதம் நின்று விடும்.

ஆ. அது வெளி நிர்ப்பந்தமின்றி (அதாவது ராணுவ பலாத்காரம், எனது உண்ணாவிரதம் என்கிற நிலைமையின்றி) கடமையை உணர்வதிலிருந்து (அதாவது ஒவ்வொருவரும் நாம் எல்லோரும் இந்நாட்டு மக்கள். மதம் மாறுபட்டாலும் ஆண்டவன் ஒருவனே. நாம் நம் ஒருவர்க்கொருவர் சண்டை பிடிப்பது சரியில்லை. நாமனைவரும் ஒருவர்க் கொருவர் உதவி ஒத்தாசையுடன் வாழ்வதே நம் கடமை என்பதை உணர்வதிலிருந்து) ஏற்படவேண்டும்.

உண்ணாவிரதப் பலன்.

ஆசியாவிலும் அதன் மூலமாக உலகத்திலும் இந்தியாவுக்கிருந்து வரும் பெருமையும் சுதந்தரமும் வேகமாக மறைந்து கொண்டே வருகின்றது. அவற்றைத் திரும்பப் பெறவேண்டும்.

ஜனவரி 13.

"காந்திஜீக்கு ஆமாம் போடுபவர் என்ற பெயர் சர்தாருக்கு வெகு காலமாக அளிக்கப்பட்டிருந்தது. இப்போழுது அவர் அதே நிலையில் இல்லை. என்றாலும் அவர் இன்னமும் எனது விலையுயர்ந்த நண்பராகவே இருக்கின்றார்.

ஜனங்கள் மனது சுத்தியாக வேண்டும். தங்கள் மனதிலிருந்து கெட்ட எண்ணங்களை அகற்ற வேண்டும். அப்பொழுதுதான் நான் உண்ணாவிரதத்தை நிறுத்திக் கொள்ள முடியும்."

1. என் பேச்சை இப்பொழுது சர்தார் பட்டேல் ஏற்பதில்லை.
2. எப்பொழுது உண்ணாவிரதம் நிற்கும்? ஜனங்கள் மனம் கெட்ட எண்ணங்களைப் போக்கிச் சுத்தி பெறவேண்டும். அப்பொழுதுதான் நான் உண்ணாவிரதத்தை நிறுத்துவேன்.

ஜனவரி 14.

"உண்ணாவிரதத்தைக் கூடியசீக்கிரத்தில் முடித்துக்கொள்ள வேண்டும் என்று நான் விரும்பவில்லை. இதை என்னிடத்தில் நம்பிக்கை வைக்காதவர்கள் தெரிந்து கொள்ளட்டும்! என்னைப் போன்ற மூடன் ஒருவனின் இத்தகைய கனவு நிறைவேறா விட்டாலோ எனது உண்ணா விரதம் நிற்கா விட்டாலோ பாதகமில்லை. தேவையான காலம்வரையில் காத்திருக்க நான் தயாராயிருக்கிறேன். ஆனால் எனது உயிரைக் காப்பதற்காக ஜனங்கள் நடந்து கொண்டார்கள் என்று கூறப்படுவதால் எனக்கு வேதனை உண்டாகும். ஆண்டவன்தான் இந்த உண்ணாவிரதத்தை ஆரம்பிக்க உத்தரவிட்டிருக்கிறார். அவர் திருவுளம் இருந்தால் அது நின்றுவிடும். கடவுள் திருவுளத்தை யாராலும் மாற்ற முடியாது."

1. நான் உண்ணா விரதத்தை விரைவில் நிறுத்த மாட்டேன்.
2. என் உண்ணா விரதத்திற்காக ஜனங்கள் தங்களின் கெட்ட எண்ணங்களைப் போக்கி நடந்து கொண்டார்கள் என்றால் எனக்கு அது வேதனையே.
3. ஏன் தொடங்கினேன்? ஆண்டவன் உத்தரவால் அடியேன் தொடங்கினேன்.
4. எப்போது நிற்கும்? ஆண்டவன் திருவுளமிருந்தால் நிற்கும்.

ஜனவரி. 15.

"மற்றவர்கள் என்ன செய்கிறார்கள் என்பதைப் பற்றிக் கவலைப் படாதீர்கள்! ஒவ்வொருவரும் ஆத்ம பரிசோதனையில் இறங்கி தன்னைக் கூடுமானவரையில் சுத்தி செய்துகொள்ள வேண்டும். ஜனங்கள் போதிய அளவு சுத்தமானால் இந்தியாவுக்கும் உதவியாக இருக்கும்; அவர்களுக்கும் அனுகூலம்; எனது உண்ணா விரத காலமும் குறையும். எனக்காக யாரும் கவலைப்படக் கூடாது. தங்களை எப்படித் திருத்திக் கொள்வது? நாட்டின் நலனுக்கு எப்படி வேலை செய்வது? என்பதிலேயே அவர்கள் சிந்தனை செலுத்த வேண்டும்"

ஒவ்வொருவரும் ஆத்ம பரிசோதனையில் ஈடுபட்டு மனதைச் சுத்தப்படுத்திக் கொள்ள வேண்டும். இதனால் மூன்று நன்மைகள் உண்டு.

1. இந்தியாவுக்கு உதவி.
2. இந்தியருக்கும் அனுகூலம்.

(தொடர்ச்சி 10-ம் பக்கம்)

வாடகை கொடுக்கும் வீடு சொந்த வீடா?

மனத்தது மாசுஆக, மாண்டார் நீராடி
மறைந்தொழுகும் மாந்தர் பலர்.

—திருவள்ளுவர்.

குடி அரசு

24—1—48 சனிக்கிழமை.

## பெரியாரின் வாழ்த்துச் செய்தி.

★

திராவிடப் பெருங்குடி மக்களுக்குத் திராவிடத்தந்தை பெரியார் அவர்கள் விடுத்துள்ள புத்தாண்டு வாழ்த்துச் செய்தியை நம் திராவிடத் தோழர்கள் அனைவரும் பார்த்திருப்பார்கள் என நம்புகிறோம்.

**"இதிகாச புராணக் கூத்துகளை விலக்க வேண்டும்; புராணக் கூத்தாடிகளை ஆதரிக்கவே கூடாது.**

**இதிகாச–புராண சினிமாக்களுக்குச் செல்லவே கூடாது.**

**இதுவே புத்தாண்டுக்கு நான் தரும் அவசரத் திட்டமாகும்"**

பெரியார் அவர்களின் வாழ்த்துச் செய்தி இது.

இப்போது சில காலமாகச் சில நடிகர்கள் புராணக் கூத்துகளை நடத்துவதற்கும், புராணக்கதைகளைச் சினிமாவில் நடித்துக்காட்டுவதற்கும், நம் சுயமரியாதை இயக்கம்—திராவிடர் இயக்கத்தின் காரணமாகச் சிறிது பின் வாங்குகின்றார்கள் என்றே வைத்துக்கொண்டாலுங்கூட, உண்மையில் புராணக்கதைகள் மீது நடிகர்களுக்கு மோகம் குறையவில்லை என்பதைத்தான் இன்று நம் நாட்டில் நடக்கும் பல நாடக மேடைகளும் சினிமாத்திரைகளும் விளக்குகின்றன.

நாடக மேடைகளும், சினிமாக்களும் வெறும் பொழுது போக்குக்காக என்கிற பெயரிலே, இன்று பொழுதையும் போக்கிப் பொருளையும் போக்கி மக்கள் மானத்தையும் அறிவையும் போக்குவதற்கே (பெரும்பாலானவை) இருந்து வருகின்றன என்ற உண்மையை யோசித்துப் பார்க்கும் ஒவ்வொருவரும் தெரிந்து கொள்ளமுடியும். ஆனால் யோசனை நடந்ததா? நடிகர்கள் விட்டொழித்தார்களா?

தற்கால நாடக—சினிமாக்களினால் நாம் அடையும் கேடுகள் எவ்வளவு? இதை விளக்கமாக நம் தலைவர் பெரியார் அவர்கள் பல ஆண்டுகளாக உணர்த்தி வந்திருக்கின்றார்கள். ஆனால் எத்தனை பேர் உணர்ந்தார்கள்?

நாடகம்—சினிமா என்பவை வெறும் பொழுது போக்குக்காக என்கிற நிலைமை அதுவும் எல்லாத் துறைகளிலும் வீழ்ந்து கிடக்கும் மக்களைக் கொண்ட நமது நாட்டில் இருக்கலாமா?

மக்களின் வாழ்வைப் பண்படுத்துவதாக இருக்கவேண்டாமா? மக்களின் யோக்கியதை, நாணயம், தரம் ஆகியவைகளை உயர்த்து முறையில் இருக்கவேண்டாமா? அறிவைப்பெருக்குவதற்கு—வளர்வதற்கு—உதவி செய்வதாக இருக்க வேண்டாமா?

இவைதான் இல்லாது போகட்டும்! மக்களின் அறிவை மழுங்க வைப்பதற்குத் துணை செய்யலாமா? மக்களின் ஒழுக்கம் கெடுவதற்கு உதவி செய்யலாமா? இதைக் கவனிக்கவேண்டிய பொறுப்பு யாருக்கு? நூற்றுக்குப் பத்துப் பேரே படித்திருக்கின்றார்கள் என்று புள்ளி விபரம் தரும் சர்க்கார்—நாட்டு மக்கள் அறிவைப் பெருக்குவதற்கு மற்ற நாடுகளில் படக்காட்சிகளையேபெருந்துணையாகக் கொள்கிறார்கள் அந்தந்த நாட்டு சர்க்கார்கள் என்பதை அறிந்திருக்கும் சர்க்கார் இதைக் கவனிக்கவேண்டாமா?

சர்க்காரிலே இன்று நம் மாகாணத்தில் பிரதான பாகங்களை ஏற்று நிர்வகிக்கும் மந்திரிகளில் பெரும்பாலோர் திராவிடர்கள். இதை நாம் கூறுகிறோம். ஆனால் அவர்களுக்கு அந்த உணர்ச்சியே இல்லை. இன உணர்ச்சியற்ற சடலங்களாயிருந்தாலும்மக்களின் நல்வாழ்வைக்கருதும் நற்பண்பும், ஒப்புக்குக்கூடவா இல்லாது போக வேண்டும்?

சுதந்தர சர்க்கார் என்று சொல்லுகிற மந்திரிகள், எல்லோரும் வாழ்வதே எமது நோக்கம் என்று பீத்திக்கொள்ளும் மந்திரிகள், இன்று வடநாட்டாரின் அடிமைகளாக, "திராவிடர் நலம் பேணுவோர் எமது தீராத விரோதிகள்" என்று சொல்லவேண்டிய, முற்றிய அடிமை நிலைக்குப் பாத்திரமாக ஆகிவிட்டனர். "எதைக் குறை கூறினாலும் பொறுப்பேன். சாஸ்திரங்களைக் குறை கூறுவதைப் பொறுக்கமாட்டேன், தாங்காது" என்கிறார் நம் திராவிடப் பிரதமர். இது அடிமையின் மோகம் எந்த உச்சி நிலைக்குப் போயிருக்கிறது என்பதைக் காட்ட வில்லையா?

அறிவை வளர்க்க, மக்களின் ஒழுக்கத்தைப்போற்ற, விஞ்ஞான முதிர்ச்சியின் விளைவான படக்கலையின் துணையைப்பெற விரும்பாத மந்திரிகள், யாரேனும் அறிவுப் பணியைச் செய்ய முன் வந்தாலும் அடாது என்று தடுக்கின்றனர். கத்திரியைக் கையில் தூக்குகின்றனர். வெட்டுவோம் என்று மிரட்டுகின்றனர்.

இந்த நிலையில் தான் நம் பெரியார் அவர்கள் புராணக் கூத்து—சினிமாப் பகிஷ்காரமே இப் புத்தாண்டிற்கு நான் தரும் வாழ்த்துச் செய்தி என்கிறார்கள்.

"புராணக் கூத்துகளை விலக்க வேண்டும். புராணக் கூத்தாடிகளை ஆதரிக்கவே கூடாது. புராண சினிமாக்களுக்குச் செல்லவே கூடாது." இதற்குப் பெயர் வாழ்த்தா? கருத்திற்கு வேலை கொடாதவர்களுக்கு இந்தச் சந்தேகம் ஏற்படத் தான் செய்யும்.

விஞ்ஞான வளர்ச்சியால் மேல் நிலைக்கு வந்த நாடுகளைப் பார்க்கின்றோம். விஞ்ஞான அறிவு, மக்களுக்கு உணவிலும் உடையிலும், குடியிருப்பு மனையிலும், பிற வாழ்க்கை வசதிகளிலும் தாசானு தாசனாய் நின்று, ஏவிய பணி கேட்டு இன்ப நிலையை வளர்ப்பதாய் ஓங்கி வருகின்றது, மக்களின் உடலுழைப்புச் சுருங்குகிறது எனப் படிக்கின்றோம். நாமும் என் அவ்வாறான நிலையையடையக் கூடாது எனவும் எண்ணுகிறோம். ஆனால் நம்மிடம் அதற்கான முயற்சி இல்லை. ஏன்?

வாழ்வில் ஏற்படும் மேடுபள்ளும்,

ரோஜா முத்தையா
ஆராய்ச்சி நூலக அறக்கட்டளை

வஞ்சகர் செயல் என்பதை உணர்கின்றோம். ஏழை-பணக்காரன் ஆவது இறைவன் செயலல்ல. எத்தனையோ அன்னக் காவடிகள் சண்டைக்குப் பிறகு பெருஞ் சீமான்களாகி விட்டதை உணர்கிறோம். விலாசம் தெரியாதவர்கள் எல்லாம் மந்திரிகளாகியதை உணர்கின்றோம். உணர்ந்தாலும் வஞ்சகர் தொலைய வலுவற்றவர்களாய் இருக்கின்றோம்.

ஜாதிகள் இருப்பது சமரசத்திற்கு நாசம். படிக்கின்றோம் கவிதைகளை, கட்டுரைகளை. பார்க்கின்றோம் அன்றாட நிகழ்ச்சிகளை. மனிதனுக்கு மனிதன் பேதம் கூடாது எனப் பேசுகின்றோம். ஆனால்செயலில் காட்டுவதற்குத் துணிவுண்டாவதில்லை ஏன்?

நல்வாழ்வு வாழ்கின்றவர்களைப் பார்த்து நாமும் அவ்வாறு வாழவேண்டும் என ஆசைப்படுகின்றோம். மறுகணமே அன்று எழுதினவன் அழித்தெழுதவா போகிறான் எண்றெண்ணி ஆசையைக் கைகழுவி விடுகின்றோம் ஏன்?

முன்னேற்ற உணர்ச்சிகளுக்கெல்லாம் முட்டுக் கட்டையாயிருப்பது இன்றைய இந்து மதம். இந்து மதத்தின் தூண்களாயிருப்பவை இதிகாச புராணங்கள். இந்த இதிகாச புராணங்களின் நஞ்சு இந்நாட்டு மக்களின் உடம்பில் பரவிநிற்கின்ற வரையில்தான், வஞ்சகர்களின் வாழ்வு தழைக்கும். இந்த நஞ்சைப் பரப்பும் பெருங் கருவிகளாய் இருப்பவை இன்று சினிமாவும் நாடகமுமே. நஞ்சை நீக்குவதே நாம் நலமார்ந்த வாழ்வை அடைவதின் அறி குறி. அதனால்தான் இதனை வாழ்த்துச் செய்தியாக - அவசரத் திட்டமாக நம் தலைவர் அவர்கள் நமக்கு விடுத்திருக்கிறார்கள்.

"ஒரு படம் எடுக்க சராசரி ரூ 50000 செலவாகிறது. தமிழ் நாட்டில் மொத்தமே 300 படங்கள் ஓடுவதாக வைத்துக் கொள்வோம். இதற்கு ஒன்றரைக் கோடி ரூபாய் ஆகும் அல்லவா? இப்படங்களை ஓட்டிக் காண்பிக்கும் கொட்டகைகளும் கூடாரங்களுமாக தமிழ் நாட்டில் சுமார் 300 இடங்களில் தினமும் 2 காட்சிகள் நடப்பதாகவும் ஒவ்வொரு காட்சிக்கும் 125 ரூ மாத்திரமே சராசரி வசூலாவதாகவும் கணக்கு வைத்து 600 காட்சிகளுக்கும் கணக்குப் போட்டால் தினம் ஒன்றுக்கு எழுபத்தி அய்யாயிரம் ஆகிறது. இத்துடன் இந்தச் சினிமா பார்க்கும் ஆண், பெண், குழந்தைகளின் போக்குவரத்துச் செலவு, வெற்றிலை பாக்கு சோடா சிகரெட் முதலிய சில்லரைச் செலவு (ஆண் பெண் அலங்காரச் செலவு சேராமல்) மூன்றில் ஒரு பாகம் போட்டாலும் அதுவும் இருபத்தி அய்யாயிரம் ஆகும். ஆகவே தினம் ஒன்றுக்குக் காட்சி போகின்றவர்கள் செய்யும் செலவு டிக்கட் உட்பட ஒரு இலட்ச ரூபாய் ஆகிறது. ஆகவே ஒரு வருஷத்திற்கு மூன்று கோடியே அறுபது லட்ச ரூபாய் ஆகிறது.

இனி இதற்காக என்றே கொட்டகை கட்டி வைத்து மாதம் 100-க்கு 5 ரூபாய் முதல் 20 ரூபாய் வீதம் வட்டி கட்டும்படி இலாபம் சம்பாதிக்கும் கொட்டகை முதலாளிகள் போட்ட கொட்டகை முதலைப்பாருங்கள். கொட்டகை ஒன்றுக்குச் சராசரி ரூ. 2500 கொள்முதல் போட்டுக்கொண்டாலும் 200 கொட்டகைகளுக்கு அய்ம்பது லட்சம் ரூபாயும், கூடாரம் 100க்கு இயந்திரம் உட்பட சுமார் 5 லட்ச ரூபாயும் ஆக 55 இலட்ச ரூபாய் முடங்கிக்கிடக்கிறது.

எனவே முதல் முடக்கம் 3 கோடி. நித்திய செலவு வருடத்தில் 3½ கோடி"

இது போருக்கு முன்னால் உள்ள மதிப்பின்படி பெரியார் அவர்கள் சினிமா செலவின் ஒரு பகுதியை ஒரு காலத்தில் சித்திரித்துக் கூறியதாகும். வாழ்க்கைப் புள்ளி 306 ஆக இருக்கும் இப்போதைய நிலையோடு பொருத்திப் பெருக்கிப்பாருங்கள். முதல் முடக்கம் 9 கோடி நித்திய செலவு வருடத்தில் 10½ கோடி என்று நீங்களே கூறுவீர்கள்.

இந்தச் செலவு திட்டத்தில் சினிமாச் சுருளுக்காக வெளிநாட்டுக்குப் போகும் பணம் எவ்வளவு? உணவு போதாமல் மக்கள் பட்டினியால் சாகிறார்கள்; செத்தாலும் கூட வெளிநாட்டிலிருந்து உணவுப் பொருளை வரவழைக்கமாட்டோம் என்கின்றனர். காரணம் வெளிநாட்டு நாணயப் பரிவர்த்தனை குறைகிறது என்கின்றனர். ஆனால் அக்கிரம ஆபாச அறியாமையைப் பெருக்கச் சினிமாச் சுருளுக்காக மட்டும் வெளிநாட்டு நாணயப்பரிவர்த்தனைக்குக் குறைந்தாலும் கேடில்லை என்கின்றனர்.

ஸ்டுடியோக்கள் அமைத்திருக்கும் செலவு, மற்ற செலவு ஆகியவைகளையும் சேர்த்தால் இன்னும் எத்தனையோ கோடி ரூபாய்கள் முதல் முடக்கத்தில் ஆகும்.

இவ்வளவு கோடி ரூபாய்கள் இந்த சினிமாத் துறையில் மட்டும் செலவாகின்றதே. இது அவ்வளவும் யாருடைய பொருள்? ஏழைப் பாட்டாளித் தமிழ் மகனுடைய கணக்கு மட்டும் இது. இன்னும் ஆந்திரா மலையாளம் கன்னடப் பகுதிகளில் ஆகும் செலவையும் சேர்த்துக் கணக்கிட்டால், மதுவினால் மக்கள் இழந்த பொருளைக் காட்டிலும் இது அதிகமாகவே இருக்க முடியும். இப்போதையப் புராணப் படங்களினால் மக்கள் அடையும் பயனோடு மதுவின் பயனையும் ஒப்பிட்டுப் பார்த்தால், சினிமாவினால் உண்டாகும் தீமையில் 100ல் 5 பங்குதான் மதுவினால் உண்டாகும் தீமை என்று கூறலாம்.

வருணாச்சிரமத்திற்கு விடுதலை கிடைத்த வக்கிர நாளாகிய ஆகஸ்ட்டுப் பதினைந்து, இந்து மதத்தின் மறுமலர்ச்சியேயாகும். இம்மறுமலர்ச்சிக்குச் சினிமா— நாடகத் துறையில் நடிகர்களாயிருக்கும் திராவிடர்களே உதவியாக இந்த அக்கிரமத்தை முன்னின்று செய்கின்றார்கள்.

மதுவை ஒழிக்க முன்வந்த நம் மந்திரிகள் எந்த நோக்கத்தோடு அதைச் செய்தார்கள்? ஏதோ ஒழிக்கவேண்டும் எனக்கூறினோம்; அதற்காக ஒழிக்க வேண்டியதாயிற்று (அதுவும் அரை குறையாக) என்றுகூற வேண்டிய நிலையில்தான் இருக்கின்றார்களே தவிர, தீமையை உணர்ந்து விலக்கினோம் — விலக்குகிறோம் என்று சொல்ல முடியுமா? சொல்வதாயிருந்தால் அதற்கு முன்னாலேயே இந்த அக்கிரமத்தைத் தடுக்கும் புத்தி இருந்திருக்க வேண்டுமல்லவா?

ஆகவே தான் பெரியார் அவர்கள் திராவிட மக்களை வேண்டுகிறார்கள் இந்தப் பகிஷ்காரத்திலே இறங்கும்படி.

திராவிட மக்கள் சிந்திக்க வேண்டும்! இப் பகிஷ்காரத்தை எவ்வாறு தொடங்குவது என்பதை ஆலோசிக்கவேண்டும்! விரைவில் செயலில் இறங்கவேண்டும்! திராவிடர்களே—தன்மானத் தமிழர்களே! எங்கே எப்பொழுது எப்படிச் செய்யப்போகின்றீர்கள்?

## வருந்துகிறோம்.

சென்னைத் தோழர் டாக்டர் மாசிலாமணி முதலியார் அவர்கள் 14-1-48 பொங்கல் நாளன்று மாரடைப்பால் மறைவடைந்தார் என்பது கேட்டு மிகவும் வருந்துகின்றோம்.

[7ம் பக்கத் தொடர்ச்சி]

3. என் உண்ணாவிரத காலமும் குறையும். அதாவது உண்ணாவிரதம் நிற்கும்.

உண்ணாவிரதம் எப்பொழுது நிற்கும்? ஒவ்வொருவரும் ஆத்ம பரிசோதனையில் ஈடுபட்டு மனதைத் தூய்மைப் படுத்திக் கொண்டால் அப்போது நிற்கும்.

**ஜனவரி. 16.**

"உபவாஸத்தின் நான்காவதுநாளன்று இந்தத் தடவைபோல் இதற்கு முன் ஒருபொழுதும் இவ்வளவு உடல்வலுவு எனக்கு இருந்ததில்லை. ஆத்ம சுத்தியில் எல்லோரும் இனியும் ஈடுபடுவராயின் இறுதிவரை பேச எனக்குச் சக்தியிருக்கக்கூடும். உண்ணாவிரதத்தை முடிக்க நான் அவசரப்படவில்லை. அவசரம் காரியங்களைக் குட்டிச் சுவராக்கும். காரியம் முற்றும் பூர்த்தியாகு முன் எல்லாம் சரியாகி விட்டதென என்னிடம் யாரும் வந்து கூறுவதை நான் விரும்பவில்லை. டில்லியில் உண்மையிலேயே அமைதி ஏற்படுமாயின் அதன் எதிரொலி நாடு முழுதும் கேட்கும். இரு நாடுகளிலும் அமைதி ஏற்பட்டால் ஒழிய எனக்கு வாழ விருப்பமில்லை."

[பாகிஸ்தானின் ரொக்க இருப்பைத் தடைப்படுத்தி வைத்த இந்திய யூனியன், இன்றுதான் ரிசர்வ் பேங்கிற்கு அந்த 55 கோடி ரூபாயையும் கொடுத்துவிடுமாறு உத்தரவிட்டது.]

"இந்த சமிக்ஞைக்குக் காரணம் என்னுடைய உண்ணாவிரதமேதான். உண்ணாவிரதமிருந்திருக்காவிடில் சட்ட வரம்புக்கு வெளியே அவர்கள் சென்றிருக்க மாட்டார்கள்"

"பாகிஸ்தானிலோ இதர இடங்களிலோ எவ்விதக் குழப்பம் நேர்ந்தாலும் டில்லியிலுள்ள இந்து முஸ்லிம் சீக்கியரிடையே அய்க்கியம் குன்றாத நிலைமை ஏற்பட்டால் என்னுடைய விரதம் பூர்த்தியாகும்."

"டில்லி மக்களின் மீது மட்டும் பெரும் சுமையைப் போடுவது தவறு. யூனியன் வாசிகள் எல்லாம் தேவர்கள் அல்ல. என்ன நேருமென்பதைப்பற்றிக் கவலைப்படாமல் யூனியன் சர்க்கார் தாராளமாக நடந்து கொண்டிருக்கின்றனர். பதிலுக்கு பாக்கிஸ்தான் எவ்வித சமிக்ஞை செய்யப்போகிறது?"

1. இன்று எனக்கு உடல் வலுவு இருக்கிறது. இதற்குக் காரணம் உங்களின் ஆத்ம சுத்தியே. இனியும் எல்லோரும் ஆத்மசுத்தியில் ஈடுபடவேண்டும்.
2. விரதத்தை முடிக்க அவசரமில்லை.
3. இந்தியா— பாக்கிஸ்தான் இரண்டிலும் அமைதி வேண்டும். இல்லையேல் வாழேன்.
4. எனதுஉண்ணாவிரதந்தான் இந்தியயூனியனைபாக்கிஸ்தான் பணத்தைக் கொடுக்க வைத்தது.
5. பாக்கிஸ்தான், டில்லியைத் தவிர்த்த மற்றைய இடங்களில் எவ்விதக் குழப்பம் இருந்தாலும், டில்லியில் மட்டுமாவதுஅமைதிவேண்டும். அப்பொழுது தான் உண்ணாவிரதம் பூர்த்தியாகும்.
6. இந்திய யூனியனைப்போலப் பாக்கிஸ்தான் எடுத்துக் கொள்ளப்போகும் பதில் சமிக்ஞை என்ன?

**ஜனவரி 17.**

உண்ணாவிரதத்திற்கு அரசியல் நோக்கு உண்டெனத் தவறாகக் கருதக்கூடாதென டாக்டர் நாயர் மூலம் அனுப்பியிருந்த செய்தியில் காந்திஜீ கேட்டுக்கொண்டார். தன்னுடைய உண்ணாவிரதத்துக்காக மட்டும் எவரும் எதையும் செய்யக்கூடாது என்பதையும்வற்புறுத்தினார்.

ராஜன் பாபுவின் தலைமையில் மத்திய அமைதிக் கமிட்டி ஒன்று (இன்று தான்) ஸ்தாபிக்கப்பட்டுள்ளது.

எல்லா சமூகத்தினரும் நிறைந்திருந்த கூட்டமொன்றில் உண்ணாவிரதத்தை நிறுத்துவதற்குக் காந்திஜி கூறியுள்ள நிபந்தனைகளை மௌலானா ஆஜாத் அறிவித்தார். இது விஷயத்தில் எல்லோரும் சிரத்தை செலுத்த **ஆரம்பித்து விட்டனர்.** கூடிய சீக்கிரமே இந்நிபந்தனைகள் நிறைவேறி விடுமென்று எதிர்பார்க்கப்படுகிறது.

இவைதான் 17-ம் நாள் குறிப்பிடக்கூடிய செய்திகள்.

**ஜனவரி 18.**

**காந்திஜியின் வெற்றி— உண்ணாவிரத முடிந்தது. என்ற செய்தி,**

நேற்று மௌலானா ஆஸாதிடம் காந்திஜீ தெரிவித்த ஏழு நிபந்தனைகளையும் நிறைவேற்றிவைப்பதாகச் சமாதானக் கமிட்டி அங்கத்தினர்கள் 12-20 மணி சுமாருக்கு இன்று உறுதிமொழியளித்த பின்னரே, விரதத்தை முடிக்க காந்திஜீ தீர்மானித்தார்.

இது தான் காந்திஜீயின் வெற்றிச் செய்திக்குப் பத்திரிகைகள் தரும் விளக்கம். வேறு தனியாக காந்தியாரின் அறிக்கை எதுவுமில்லை.

**ஏழு நிபந்தனைகள்.**

1. குவாஜா பக்தியாரின் சமாதியில் வழக்கம்போல இவ்வாண்டிலும் சந்தை நடைபெறவேண்டும். அதில் பீதியின்றி முஸ்லீம்கள் கலந்து கொள்ளவேண்டும்.
2. 117 மசூதிகள், இப்பொழுது ஆலயங்களாகவோ, வாசஸ்தலங்களாகவோ மாற்றப்பட்டிருக்கும் நிலைமை மாறி அவை மீண்டும் மசூதிகளாகவேண்டும்.
3. முன்பு முஸ்லீம் பெருவாரிப் பிரதேசங்களாக இருந்த பகுதிகளில் முஸ்லீம்கள் பயமேதுமின்றி மீண்டும் நடமாட வகையேற்படவேண்டும்.
4. பாக்கிஸ்தான் சென்ற முஸ்லீம்கள் திரும்பி வந்தால் டில்லி இந்துக்கள் ஆட்சேபிக்கக்கூடாது.
5. ரயில்களில் முஸ்லீம்கள் அபாயமின்றிப் பிரயாணம் செய்யும் சூழ்நிலை ஏற்படவேண்டும்.
6. முஸ்லிம்களைப் பொறுத்துப் பொருளாதாரப் பகிஷ்காரம் உதவாது.
7. டில்லி முஸ்லிம் பகுதிகளில் முஸ்லிமல்லாதாருக்கு ஜாகை வசதியளிக்கும் பொறுப்பு அப்பிரதேச வாசிகளுக்கே விடப்படவேண்டும்.

இந்த ஏழு நிபந்தனைகளைச் சமாதானக் கமிட்டியார் நிறைவேற்றுவதாக ஒப்புக்கொண்டு உறுதியளித்த 20 நிமிடங்களில் காந்தியார் ஆரஞ்சு ரசம் அருந்தி உண்ணாவிரத நாடகத்தை முடித்துக் கொண்டார்.

நாடகம் என்றாலே நாக்கைப் பிடுங்குவோமா என்றெண்ணும் சூரர்களே! தியாகிகளே! மதிமிக்க மந்திரிகளே! உங்களுக்கும் அறிவு இருக்கிறது. இந்த உறுதியான நம்பிக்கையினாலேயே இக்குறிப்பைத் திரட்டித்தந்திருக்கின்றேன், எண்ணிப்பாருங்கள்.

**பட்டினி ஏன்? எப்பொழுது**

ரோஜா முத்தையா ஆராய்ச்சி நூலக அறக்கட்டளை

முடியும்? இவற்றை ஒவ்வொரு நாளும் ஒவ்வொரு வகையாகக் கூறியிருக்கும் காந்தியார், பட்டினி நாடகத்தை முடித்துக்கொண்டதற்குக் கூறும் நிபந்தனைகள் யாவை? நிபந்தனைகளை எண்ணிப்பாருங்கள். ஆலோசித்துப் பார்க்கும் திறனிருந்தால், நீங்களே நாக்கைப்பிடுங்கிக் கொள்வீர்கள்? கை எச்சிலாகி விடுமே என்று கவலைப்படமாட்டீர்கள்.

### எப்பொழுது நிற்கும்?

எல்லா வகுப்புகளிடையேயும் மீண்டும் ஒற்றுமை ஏற்பட வேண்டும். அப்பொழுதுதான் என் உண்ணாவிரதம் நிற்கும். இது ஜனவரி 12 ம் நாள் கூறியது.

மக்கள் மனமாசு நீங்கி மனத் தூய்மை பெறவேண்டும். அப்பொழுதுதான் என் உண்ணா விரதம் நிற்கும். இது 13 ம் நாள் கூறியது.

ஆண்டவன் இட்டார் உத்தரவு. அவர் திருவுளமிருந்தால் என் உண்ணாவிரம் நிற்கும் இது 14 ம் நாள் கூறியது.

ஒவ்வொருவரும் ஆத்ம பரிசோதனையில் ஈடுபட்டு மனதைச் சுத்தப் படுத்திக் கொள்ள வேண்டும். இதனால் தான் என் உண்ணா விரதம் நிற்கும். இது 15 ம் நாள் கூறியது.

இந்தியா-பாகிஸ்தான் இரண்டிலும் அமைதி வேண்டும். அப்பொழுதுதான் என் உண்ணா விரதம் நிற்கும். இது 16 ம் நாள் கூறியது.

பாகிஸ்தானிலோ மற்றைய இடங்களிலோ குழப்பம் இருந்தாலும் பாதகமில்லை. டில்லியிலாவது அமைதி வேண்டும். அப்பொழுதுதான் என் உண்ணா விரதம் நிற்கும். இதுவும் 16 ம் நாள் கூறியதுதான்.

டில்லியில் முஸ்லிம்கள் மனிதர்களாக வாழுவதற்கு மறுக்கப்படும் கொடுமைகள் தொலைய ஏழு நிபந்தனைகள். இந்நிபந்தனைகள் நிறைவேற சமாதானக் கமிட்டியார் ஒப்புக் கொண்டால் என்விரதம் நிற்கும். இது 17 ம் நாள் கூறியது.

காந்திஜீ வெற்றி 18-ம் நாள்.

### விரத நிர்ப்பந்தம்.

ஒற்றுமை ஏற்பட வெளி நிர்ப்பந்தம் இல்லாமல் கடமையை உணர்வதிலிருந்து ஏற்பட வேண்டும் இது 12 ம் நாள்.

எனது உண்ணாவிரதத்திற்காக ஒன்று நடந்தது என்று கூறப்படுவதால் எனக்கு வேதனையுண்டாகும். இது 14 ம் நாள்.

இந்திய யூனியனின்சமிக்ஞைக்குக் காரணம் எனது உண்ணாவிரதமேதான். (கூறப்படுவதால் என்ற நிலைமைகூட இல்லை. அவரே கூறுகிறார்.) இது 16 ம் நாள்.

### விரத நோக்கம்.

எல்லா வகுப்புகளிடையேயும் மீண்டும் ஒற்றுமை ஏற்படல். இது 12 ம் நாள். உண்ணா விரதத்திற்கு எவ்வித அரசியல் நோக்கமும் இல்லை. இது 18 ம் நாள்.

### விரதத்தின் பலன்.

ஆசியாவிலும் உலகத்திலும் இந்தியாவுக்கிருக்கும் பெருமையும் சுதந்தரமும் வேகமாக மறைகிறது. அதைத் திரும்பப் பெறவேண்டும். இது 12 ம் நாள்.

மக்கள் மாசு தீரல் இது 13ம் நாள்.

இதே பலன் தான் 15ம் நாளிலும்.

இரு நாடுகளிலும் அமைதி ஏற்படல் இது 16ம் நாள்.

டில்லியில் மட்டுமாவது அமைதி ஏற்படல். இதுவும் 16 ம் நாள்.

டில்லியில் பறிபோன முஸ்லிம்கள் உரிமைகளை மீட்டல். இது 17ம் நாள்.

### உண்ணாவிரதத்திற்காக ஒன்றையும் செய்யாதீர்.

இதை எல்லா நாளும் கூறினார். 14ம் நாள் பாகிஸ்தான் பணத்தை இந்திய யூனியன் உண்ணா விரதத்திற்காகக் கொடுத்தது. இதைக் காந்தியாரே ஒப்புக்கொள்ளுகிறார்.

17ம் நாள் உண்ணாவிரதத்திற்காக ஒரு மத்திய சமாதானக் கமிட்டி ராஜன் பாபு தலைமையில் அமைந்தது. அக்கமிட்டியிடமே நிபந்தனைகளைக் கூறினார். அது ஒப்புக்கொண்டது. அவரும் வெற்றி பெற்றார்.

பகுத்தறியும் தோழர்களுக்குச் சொல்கிறேன்?

ஏன் இந்தப் பட்டினி நாடகம்?

பட்டினி விரதம் இக்கோரிக்கைகள் நிறைவேற என்றால், இந்த நாடகம் இல்லாமலே முடியாதா?

இல்லை.

தன் சொல்லுக்கு மதிப்பில்லை என்ற காந்தியார், அதைப் பரிசோதனை செய்வதற்காக இந்த நாடகமா?

இல்லை.

அய்க்கிய நாடுகள்சபையின் கண்களில் மண்ணைத் தூவுவதற்கு இந்த நாடகமா?

இல்லை.

தனக்குப் பிறகு தன்னைப்பற்றி ஜனங்கள் எப்படி நினைப்பார்கள் என்பதைத் தெரிந்து கொள்வதற்காக இந்த நாடகமா?

அப்பப்பா! எவ்வளவு கூட்டம்? எவ்வளவு பஜனை? எவ்வளவு தந்தி? எவ்வளவு பணச் செலவு? எவ்வளவு காலச் செலவு? எத்தனை பேருடைய உழைப்புச் செலவு? இவ்வளவும் என்ன முடிவைச் செய்தது.

உண்ணாவிரத நீலித்தனத்திற்காக முன்பு அம்பேத்கார் ஏமாந்ததைப்போல நாங்கள் ஏமாறமாட்டோம் என்கின்கிறனர், பாக்கிஸ்தான் முஸ்லிம்கள்.

இந்த நீலித்தனத்தால் எங்களைச் சித்திரவதை செய்யாதீர் என்கின்றனர் இந்துமகா சபையார்.

நீலித்தனத்திற்குப் பரிசு, நாட்டு வெட்டிகுண்டு என்கின்றான், பச்சைக்காரில் வந்த இந்து யுவன்.

காந்திஜீ வெற்றி என்கிறது பத்திரிகைகள்.

பொழுது போக்கான நாடகம். இதற்குப் பெயர் **பட்டினி நாடகம்** என்கின்றேன் நான்.

நீங்கள் என்ன சொல்லுகிறீர்கள்?


## எதிர்பாருங்கள்!

★

நமது கம்பெனியின் புத்தக நிலையம் ஒன்று விரைவில் **சென்னையில்** ஆரம்பிக்கப்படும் தேதியை எதிர்பாருங்கள்.

நாதன் கம்பெனி லிமிடெட், ஈரோடு.

## அய்யய்யோ சொல்ல வெட்கமாகுதே!

"ஆகஸ்ட்டுத் துரோகி ஆச்சாரியார். அவருக்குக் காங்கரசில் இடமில்லை." இவ்வாறு விரட்டு விரட்டென்று விரட்டினார் காமராஜர்.

"பலே பேஷ்! தமிழனின் வீரம் பாரீர்!" இவ்வாறு பாராட்டுக் கூறியன தேசியத் தமிழ்ப் பத்திரிகைகள்.

"எப்படியோ ஆச்சாரியார் காங்கரசில் புகுந்தார்!" இதை ஏற்றது வடநாட்டு மேலிடம்.

"இது அக்கிரமம்! அநியாயம்! எப்படியும் கீழ் இடத்தைப் பாராமலா மேலிடம் வேலை செய்வது! மேலிடத்திற்கு அடியுங்கள்! சாவு மணி" இவ்வாறு அலறியன கீழ் இடத்தின் பிரதிநிதிகளான ஷ் தேசியத் தமிழ்ப் பத்திரிகைகள்.

"மேலிடம் மேலிடம்தான் என்றது தலைமைப் பீடம். இதை நிச்சயப்படுத்த மந்திரிகளுள் ஒருவராக ஆச்சாரியாரை ஆக்கி, தலையை ஆட்டி நகைக்கவும் செய்தது மேலிடம்."

"மெல்லவும் முடியவில்லை விழுங்கவும் முடியவில்லை. மாட்டிக் கொண்டு விழித்தது கீழிடத்தின் பிரதிபிம்பம்."

"அமைச்சராக மட்டுமா ஆக்குகுவோம், அரசாளும் பிரதிநிதியாகவும் ஆக்குவோம். இதோ பாரீர்! இவர் வங்காளத்தின் முடிசூடா மன்னர். கவர்னர்" என்றது மேலிடம்.

கீழிடம் கீழிடம்தான் என்று மீண்டும் ஆணி அறையப்பட்டது. உப்புக் கண்டம் தின்ற பாப்பாத்தி நிலையாயிற்று இதன் நிலைமை"

"மேலிடத்தின் ஆசை தீரவில்லை. வங்காளத்திற்கு மட்டுமா? இந்திய யூனியனுக்கே இவர் ராஜப்பிரதிநிதி-ஆமாம் வெள்ளைக்கார ராஜாவின் பிரதிநிதி-கவர்னர் ஜனரல்" என்று பறைசாற்றியது மேலிடம்.

உணர்ச்சி மரத்து விட்டது கீழிடத்திற்கு. அய்யனே! மெய்யனே! துய்யனே! என்று அதட்டிய வாயினாலேயே ஆடிப் பாடித் துதிக்க வேண்டியவரானார் காமராஜர். அவருக்குப் பாராட்டு விருந்தளித்தார் டில்லிக்கே போய்.

இவை முந்திய நாள். இப்போதைய நிலைமை என்ன? ஆச்சாரியாரின் அருந்துணை இல்லாவிட்டால் காமராஜர் காங்கிரசிலே வாழ முடியாது என்ற நிலைமை. மானமழிந்தாலும் வாழ்வே பெரிதென்னும் நெடிய உருவம். எப்படியும் என்னையே தலைவனாக்குங்கள் என்று கெஞ்சுகிறார் தமிழர்களை, இன்றையக் காமராஜர். கெஞ்சிப் பிச்சைக் கேட்க ஆச்சாரியாரிடமே சர்டிபிகேட். இதோ! சர்டிபிகேட்.

"தமிழ்நாட்டினருக்குப் பகுத்தறிவும், ஹாஸ்ய சுபாவமும் அதிகம். இதை அவர்கள் அறியாமலிருக்கலாம். தவிர மனதில் எவ்வளவு துவேஷமிருந்தாலும் அவற்றை யெல்லாம் மறந்து வேலையில் ஈடுபடும் தன்மையும் அவர்களுக்கு அபாரம். இக்குணங்கள் சோபிக்கும்படி மகாநாடு இனிது முடியட்டும்! காமராஜ நாடாரை நம்புங்கள்! எல்லாவிதங்களிலும் அவருக்குத் துணை புரியுங்கள்! அவர் என்னுடைய அன்பை நிரம்பப் பெற்றிருக்கிறார்! தமிழ்நாட்டு மக்களுக்கு அவர் உண்மையாக ஊழியம் புரிவார்."

இதன் அர்த்தமென்ன தேசியத் தோழனே?

எண்ணிப்பார்த்தால் நீயும் கூறுவாய்; அய்யய்யோ சொல்ல வெட்கமாகுதே என்று. விளக்கிக் கூறவா வேண்டும்?


# K. R. ராமசாமியின் கிருஷ்ணன் நாடகசபா.

திருச்சி,

ரெத்தினவேலுத் தேவர் ஹாலில்

27—1—48 செவ்வாய் முதல் தினசரி

அற்புதமாய் அமைத்திருக்கும், சிற்பக்கலை அரங்கில்

புதுமையான மேடை அமைப்புடன், புதிய நாடகம்.

# "மணமகள்"

By. S. K. சாமி.

பாடல்கள்: நாரா. நாச்சியப்பன்.

புதன், ஞாயிறு மாலை 6-30 மற்ற நாட்கள் இரவு 9-30.

திங்கள் நாடகமில்லை.

டிக்கட்:— 3-0-0, 2-0-0, 1-3-0, 0-12-0, 0-6-0.



## இன்றே எழுதுங்கள்!

திராவிடர் தமிழ்த் தினசரியான சென்னை "விடுதலை"ப் பத்திரிக்கையிலும், சுயமரியாதை வாரவெளியீடான ஈரோடு "குடி அரசு"ப் பத்திரிகையிலும் விளம்பரம் செய்ய, விபரங்களுக்கு உடனே எழுதுங்கள்.

S. பழனியப்பா,
மாடர்ன் அட்வர்ட்டைசிங் ஏஜன்சிஸ், ஈரோடு.


ரோஜா முத்தையா

(4-ம் பக்கத் தொடர்ச்

இலாகா சிலதுறைகளில் ஓரளவு சிறந்த காரியங்களைச் செய்திருக்கிறதென்றாலும் இந்தப் பஞ்ச காலத்தின்போது அதனால் எவருக்கும் உதவி செய்ய இயலவில்லை. இந்த ஜில்லாவாசியும், தற்சமயம் இங்கு வந்திருப்பவருமான தோழர் பி. ஜி. கருத்திரும கவுண்டர் என்பவர் சாதாரணமாய் மற்ற விவசாயிகள் பெறுவதைவிட இரண்டு மடங்கு அதிகமான விளைச்சலைப் பெறும் திறமை வாய்ந்தவர்.

நான் பழங்கள் விதைகள் பருத்தி ஆகியவற்றில் சில சோதனைகள் செய்து பார்த்திருக்கிறேன். விவசாய இலாக்காவுக்கு இத்தகைய ஆராய்ச்சிகளில் ஆர்வமிருந்தாலும் அவர்கள் இதுபற்றி எவ்விதமான ஒரு முடிவுக்கும் வரவில்லை என்றே நான் கருதுகிறேன். காரணம், இந்த இலாக்காவிலுங்கூட விஞ்ஞான அறிவும் போதிய திறமையும் வாய்ந்த ஆட்கள் குறைவாயிருப்பதே யாகும். உள்ளபடியே, இந்த அரசாங்கம் மத்திய சர்க்காருக்குக் கீழ்ப்படிய வேண்டுமென்பதும், எதுவும் செய்ய வேண்டுமானால் மத்திய சர்க்காரின் அனுமதிபெற வேண்டுமென்பதும், எனக்குத் தெரியும். 'துரதிர்ஷ்ட' வசமாக மத்திய சர்க்கார் நம்மிடத்திலிருந்து இடத்திலும் ஒத்துழைப்பிலும் வெகு தொலைவிலிருக்கிறது. நெல் விலையில் ஒரு ரூபாய் கூடக் கூட்டவோ, குறைக்கவோ அவர்கள் அனுமதியின்றி நமது சர்க்காரால் முடியாது. ஆகவே நாம் நமது தனிப்பட்ட சுய அரசாங்கத்தை அடையுமுன் எதுவுமே செய்ய முடியாது என்று நான் கூறுகிறேன். ஆயினும் அதுவரையில் நமது விவசாய மந்திரியார் விவசாயிகளுக்கு நன்மை செய்யும் பொருட்டு அந்த இலாக்காவைச் சீர்திருத்தி, விவசாயக் கருவிகளை ஆக்கும் தொழிற்சாலைகளின் ஒத்துழைப்பைப் பெற்று சுலபமான போக்குவரவு சாதனங்களை ஆதரித்து வருவதில் ஈடுபடவேண்டும்.

கல்வியைப் பற்றி நான் அதிகம் சொல்லத் தேவையில்லை. நான் பள்ளிகளிலிருந்து கல்வி கற்றதே கிடையாது.

ஆசிரியர்கள் தங்கள் குறைகளை எடுத்துக் கூறினர். அவர்களுக்கு நீதி வழங்கவேண்டுமென மந்திரியார் மனம் வைத்தும் பணமில்லை. ஆனால் ஒரு புறத்தில் நமது சர்க்காரின் பணம் வீணாகி வருகிறது; மற்றொரு புறத்தில், குறைந்த ஊதியம் பெறும் ஆசிரியர்களுக்கும், சர்க்கார் ஊழியர்களுக்கும் அதிகச் சம்பளம் தரப் பொருள் இல்லை. எனினும் அரசாங்கத்தார் தற்காலக் கல்வித் திட்டத்தை விரிவுபடுத்தக் கட்டிடங்கள் கட்டுவதிலும், உபகரணங்கள் வாங்குவதிலும் ஏராளமான பணத்தை வீண் செய்து வருகின்றனர். இதோடு கூட ஆசிரியர், மாணவர்களின் அருமையான காலமும் இத்தவறான திட்டத்தால் பாழாகிறது.

ஒருவர் 280மணி நேரம் போதிக்கக்கூடிய ஒரு விஷயத்தைத்திரைப் பட மூலமும், நேரடியாகச்செய்து காட்டும் முறையினாலும் 20 மணி நேரத்தில் செய்யக்கூடும். இதே முறையில் நான் கவுரவ மேற்பார்வையாளராக இருக்கும் "ஆர்தர் ஹோப் பாலிடெக்னிக்"கில் ஓரளவு செய்திருக்கிறேன். 3, 4 மணி நேரக்கல்வியைச் சிறந்த முடிவுடன் ஓராண்டில் கொடுக்க முடியும். ஆனால் நாம் எப்படித்தான் விளக்கிய போதிலும் சர்க்காரைத் திருப்திப்படுத்த இயலாது. சர்க்காருக்கு இப்புதிய போதனா முறைகளும் விளங்காது.

எல்லாப்பள்ளிகளிலும், எல்லா விஷயங்களையும் எளிதில் கற்பிக்கும் முறை திரைப் படங்களின் மூலமேயாகும். இதற்காக, சினிமாப் புரொஜெக்டர்களும், நல்ல பிலிம்களும் தயாரிக்கும் தொழிற்சாலை இங்கு நிறுவப்படவேண்டும். இவைகளை 2, 3 மடங்கு அதிக விலை கொடுத்து அந்நிய நாடுகளிலிருந்துதருவிக்கக்கூடாது. இந்த முறை மாகாணமெங்கும் பரப்பப்பட வேண்டும். ஏதோ இரண்டொரு பள்ளிகளிலோ அல்லது இரண்டொரு மாணவருக்கோ அங்குமிங்குமாகப் போதிக்கப்படக்கூடாது.

தொழில் மந்திரியார் இத்துறையில் கல்வி மந்திரியாருடன் ஒத்துழைத்துச்சிரமப்பட்டாவது இம்முடிவு காண்பாராக.

முடிவுக் கட்டத்துக்கு வருமுன் நான்கூற விரும்புவதெல்லாம் இப்போது நமது முன்னேற்றத்துக்குத் தேவையானவை தொழிலுக்கும், விவசாயத்துக்கும், குறைந்த செலவிலும் நேரத்திலும் சிறந்த கல்வியைப் பெறவும் அவசியமான உதவிகளேயாகும். நமது கனம் மந்திரிமார் மூவரும் ஒன்று கூடி உதவுவதாக முடிவு செய்வது ஒன்றும் சிரமமல்ல. அவர்கள் நான் இதுவரை கூறிவந்த விஷயங்களைப்பற்றி ஒரு முடிவுக்கு வருமுன், அவர்களது விடுதலையைப் பற்றி நினைக்க வேண்டும். மத்திய சர்க்காரிலிருந்து அவர்கள் விடுதலை பெறாவிடில் எதுவுமே அடைய முடியாது. ஒன்று அவர்கள் மத்திய சர்க்காரிடமிருந்து விடுதலை பெறவேண்டும், அல்லது அதை ஒழித்துக் கட்டி விட்டு நமது மக்களின் தேவைகளைப் பூர்த்தி செய்யவும், முன்னேற்றத்துக்குப் பாடுபடவும் முன்வர வேண்டும்.

மந்திரிமார்களை ஒரு முக்கிய விஷயம்பற்றி எச்சரிக்க விரும்புகிறேன். அதாவது அவர்கள் தென்னாட்டுத் தொழில் வளர்ச்சிபற்றி ஏதாவது அறிய விரும்பினால்அது சம்பந்தமாய்ப் பழைய ஏடுகளிலுள்ள பிரசுரங்கள், சிபார்சுகள், முடிவுகள் ஆகியவைகளைப் பார்க்கவே கூடாது. அப்படிப் பார்த்தால் அவர்கள் இங்கே தொழில் வளர்ச்சிக்காக ஒன்றுமே செய்ய முடியாது. ஏனெனில் அத்தகைய ஆதாரங்களெல்லாம் வடநாட்டாராலோ, வடநாட்டாரின் கையாட்களாலோ, அவர்களின் நலனையே கருதுவோராலோ தயாரிக்கப்பட்டவை. அவைகளால் மந்திரிகள் தவறான வழியில் திரும்பிவிடக் கூடும்.

உதாரணமாக நீங்கள் இங்கே ஒரு எஃகுத் தொழிற்சாலை அல்லது சுரங்கச்சாலை, அல்லது மோட்டார், எஞ்சின் தொழிற்சாலை ஏதாவது தொடங்க வேண்டுமென்று மத்திய சர்க்காரைக் கேட்டால் அவர்கள் தென்னிந்தியா அதற்குத் தக்க இடமல்லவென்றும், அது பொருளாதாரத்திற்கு நல்லதல்லவென்றும், இங்கே கச்சாப்பொருட்களோ, அனுபவசாலிகளோ கிடையாதென்றும் பல நொண்டிச் சமாதானங்களைக் கூறிவிடுவர். அவர்கள் பழைய ஆட்களின் ஆராய்ச்சிகளையும் தீர்மானங்களையும் பின்பற்றியேஅவ்வாறு செய்கின்றனர். இங்குள்ள மந்திரிமார்களில் எவரேனும் வடநாட்டுக்கு ஒரு மந்திரியாகவோ, அதிகாரியாகவோ போனாலுங்கூட நீங்களும் அப்படியேதான்

சொல்லுவீர்கள்.

ஆஸ்ட்ரேலியா, ஜப்பான், அய்ரோப்பாவில் பல நாடுகளும் தங்கள் நாட்டில் பல மூலப்பொருள்கள் இல்லாமலேயே எவ்விதம் தொழில் துறையில் முன்னேறியுள்ளன என்பதை நாம் சிந்திக்க வேண்டும். வடநாட்டில்கூட எல்லா மூலப்பொருள்களும் கிடைப்பதில்லை. அப்படியானால் அவர்கள் எவ்வாறு தங்கள் நாட்டில் தொழில்களைப் பெருக்கிக் கொண்டனர்? நமது மந்திரிகள் இது சம்பந்தமாய்த் தீரயோசித்துத் தீவிரமாகவும் எச்சரிப்பாகவும் செயலில் இறங்குவார்களெனக் கருதுகிறேன்.

என்னுடைய பழங்கால நடவடிக்கைகளிலிருந்து இனி நான் அனுபவிக்க வேண்டியது ஒன்றுமில்லையெனினும், இந்தக் கூட்டத்தைக் கண்டு திருப்தியடைந்தேனெனினும் எல்லாவற்றையும்விட எனக்கு மகிழ்ச்சியளிக்கக் கூடியது என் வாழ்நாளில் தென்னாட்டில் அரசாங்கத்தாரின் பூரண ஒத்தாசையுடன் ஏதாவது பெருந்தொழிற்சாலை தொடங்கப்படுவதும், தனித்து விடுதலை பெற்ற சர்க்காரின் விவசாய இலாக்கா மூலம் விவசாயிகள் மிகுந்த பயன் பெறுவதும், நமது இளைஞர்கள் தம் எதிர்காலத்திற்கேற்ற ஒழுங்கான கல்வியைப் பெறுவதுமேயாகும்.

எனது பேச்சுக்களிற் சில நமது விருந்தினருக்கும் மந்திரிமார்களுக்கும் வருத்தத்தையளிக்கக்கூடிய வகையில் அமைந்திருக்கலாம் எனினும், நமது மந்திரிகள் உண்மையான நிர்வாகிகள் என்ற முறையில் இந்தத் "துரதிர்ஷ்டம்" பிடித்த, பின்னணியில் கிடக்கும் மாகாணத்துக்கு ஏதாவது செய்வார்களென்றே நம்புகிறேன்.

எனது அழைப்பை ஏற்று இங்கு வந்துள்ள விருந்தினரனைவருக்கும், கனம் மந்திரிமார்களுக்கும், தனியாக தோழர் K. G. மேனன் அவர்களில்லாவிடில் இங்கு நாம் கூடியிருக்க வாய்ப்பு நேரிடாதாகையால் அவருக்கும் என்நன்றி உரித்தாகுக.

பின்னர் தொழில் மந்திரியான தோழர் H. சிதாராம ரெட்டியார் பதிலளிக்கையில் "தோழர் நாயுடு அவர்கள் தாம்கூறியவாறே மத்திய அல்லது மாகாண சர்க்கார்களினால் நிர்ணயிக்கப்பட்ட, ஒத்துக் கொள்ளப்பட்ட சில காரியங்களுக்கு விரோதியேயாவார். அவர் வடநாட்டின் பெரிய வைரியாகக் காணப்படுகிறார். ஆனால் ஒரு சங்கதி மாத்திரம் உண்மை. அதாவது தென்னாட்டிலுள்ள நாம் வடநாட்டாரைப்போல முன்னேறவில்லை; தென்னாடு தொழில் துறையில் பின்னணியிலேயே கிடக்கிறது. ஆனால் இதே ஊரைச்சேர்ந்த ஒருவர் பதவிவகிக்கக்கூடிய ஒரு புதிய அரசாங்கத்தின் கீழுள்ள வடநாட்டை இப்போது இவர் சோதித்துப் பார்ப்பதே நலம்" என்பதாகப் பேசினார்.

கனம் K. மாதவ மேனன், தோழர்கள் T. A. ராமலிங்கம் செட்டியார், N. S. வரதாச்சாரியார் M. L. A. ஆகியோர் பின்னர்ப் பேசியதும், தோழர் R. S. சங்கரய்யர் நன்றி கூறினார்.

## எமது தீர்ப்பு

### நல்லுலகம்.

ஆசிரியர்: நிலவழகன்.
தேவகோட்டை.

புண்பட்ட தமிழகம் நல்லுலகமாகத் திகழும் வரை எவ்வித எதிர்ப்புக்கும் அஞ்சாது போராடி தமிழினம் வாழ—தமிழ்நாடு செழிக்க—தமிழ் மொழி வளர—தமிழ்க்கலை ஓங்க—தமிழர்களை ஒன்று சேர்க்க—சமூகத்திலே சரிந்து கிடக்கும் சழக்குகளைக் களைந்தெறிய—தமிழரசு நிறுவத் தளராதுழைப்பதே இதன் நோக்கம் எனக்கூறி தை முதல் நாளில் வெளிவந்த கிழமை இதழ்.

நோக்கம் வரவேற்கக் கூடியதே. தமிழர் யார் என்பதிலே விளக்கம் விளக்கப்பட வேண்டியதென்பதை ஆசிரியர் அறிந்திருப்பார் என எண்ணுகின்றோம். தமிழர்க்கே நிலைத்து நின்று பணியாற்றுவதாகுக!

### சிட்டு.

(வார இதழ்)
ஆசிரியர்: சொ. முருகப்பா.
அமராவதி புதூர்.

பொங்கல் வாரத்தில் முதல் கூட்டி விருந்து முதல் குஞ்சு பிறந்திருக்கிறது, "ஏன் பிறந்தது என்று கேட்காதீர்கள். ஏதோ பிறந்தது" என்கின்றார் இதன் ஆசிரியர். "தமிழ், தமிழர், தேசம், உலகம் இவை முறையே வாழவேண்டும் என்பது சிட்டுவின் அடிப்படை" இதுவும் ஆசிரியர் கூறுவதே.

"12 ஆண்டு தமிழ் நாட்டில் வாழ்ந்தவன் எவனும் தமிழனே" இது சிட்டு கூறும் தமிழன் இலக்கணம். ஒரு குஞ்சுவிலை அரையணா.

### முரசொலி.

(வார வெளியீடு)
ஆசிரியர். மு. கருணாநிதி.
திருவாரூர்.

சாணிப்பிள்ளையாரும் சீனிப்பாய சமும் பொங்கலின் குறிகோளல்ல! கோணிக்கிடக்கும் சமுதாயத்தின் குறை தவிர்க்க முரசறைவாய்! போர் முரசறைவாய்! எனக்கூறி எழுந்திருக்கும் முரசு பெரியார் ஆண்டு 69 தை முதல் நாளில் முதல் ஒலியை அறைந்திருக்கிறது.

திராவிடர் இல்லந்தோறும் இதன் ஒலி எதிரொலிக்கட்டும்! ஒரு ஒலி ஓரணா. ஓராண்டுக்கு நான்கு ரூபாய்.

### வாழ்வு.

(மாதமிரு முறை)
ஆசிரியர். தே. நாராயணன்.
புதுக்கோட்டை.
[தனிப்பிரதி 0—2—0 ஆண்டுக்கு ரூ. 3—0—0]

பலருக்கு வறண்ட பாலைவனமாகவும், ஒரு சிலருக்கே மணம் வீசும் மலர்ச்சோலையாகவும் அமைந்திருக்கிறது வாழ்வு. இந்நிலைமாறி ஏழை முதல் எவரும் உலவும் பழமுதிர் சோலையாக வாழ்வு ஆக்கப்படல் வேண்டும். அதற்கான ஆக்க வேலைத் திட்டங்களை நாட்டிலே காட்டி எழுச்சி மிக்க எண்ணங்களை ஏற்பாட்டிலே காணுமளவிற்கு "வாழ்வு" தன் உழைப்பினை நல்கும்என உறுதி கூறுகிறார் ஆசிரியர்.

தை முதல் நாளில் வெளிவந்த முழக்கத்தில், தோழர்களான சி பி. சின்னராசு, முருகு சுப்பிரமணியன், இளஞ் சேரன், சுகி முதலியோர் சிந்தனைக்கு விருந்தளிக்கின்றனர். அனைவரும் வரவேற்கத் தக்கது.

### புதுவாழ்வு.

(திங்கள் வெளியீடு)

ஆசிரியர்: க. அன்பழகன் எம். ஏ.
10. வேளாளத் தெரு
புரசைப்பாக்கம் சென்னை.

ஆசிரியர் தோழர் அன்பழகனைத் திராவிடம் நன்கு அறியும். நைந்த கந்தலான வாழ்வு தொலைந்து, உறுதியும் ஒளியுமுடைய புதுவாழ்வைத் திராவிடம் பெற, திராவிடருக்குப் பேச்சால் பணியாற்றி வந்த தோழர் எழுத்தாலும் பணியாற்ற விரும்பி இப் "புது வாழ்வை" பொங்கல் நன்னாளில் பொங்கல் மலராகக் தொடங்கியிருக்கின்றார்.

அறிவுக்கு விருந்தான அறிஞர்களின் நல்லுரைகள், பல துறைகளிலும் இம்மலரில் காணப்படுகின்றன.

தனி இதழ் 0-4-0 ஆண்டுக்கு 3-0-0

ரோஜா முத்தையா
ஆராய்ச்சி நூலக அறக்கட்டளை

[2ம் பக்கத் தொடர்ச்சி]

துடப்பாதுன்னு எழுதிருக்காளே, நீ படிச்சதில்லையா? அதை மீறினவா ளுக்கு எரி நரகம் வேறே கிடைத்துடு மாமே!''

''என்ன, சரசு! 'ஸ்கூல் பைனல்' வரை படித்திருக்கும் நீ கூடவா சாஸ்திர சம்பிரதாயங்களையும், புராண இதிகாசங்களையும், வேத் ஸ்மிருதிகளையும் நம்புகிறாய்? அவைகள் எல்லாம்என்முன்னோர்களாகிய திராவிடப் பெருங்குடி மக்களை அடிமைப்படுத்தவே உன்முன்னோர்களால் இட்டுக்கட்டி எழுதப்பட்டவை. நீ அவைகளை நம்பி மோசம் போனாய் போலும்! இனி மேலாவது அப்படிப்பட்ட அறியாமைக்கும், மூட நம்பிக்கைகளுக்கும் இடம் கொடுக்காதே. பகுத்தறிவைத் துணை கொள். எதனையும் தீரச்சிந்தித்தே செய்லாற்று........''

தலையைக் கீழே போட்டபடி தன் வலது கால் கட்டை விரலைப் பார்த்துக்கொண்டிருந்த சரஸ்வதி கோயில் ஆட்கொண்டானின் திருக்கல்யாணம் முடிந்து மக்கள் வெளிவரும் சத்தம் கேட்கவே, ''சரி, தாமோதர், நான் போயிட்டு வர்றேன். அந்தா மனுஷாள்லாம் பூஜை முடிஞ்சு வர்றா. அப்பாவும் வந்துடுவா நான் போயிட்டு வர்றேன்'' என்று கூறி, தாமோதரத்திடம் விடைபெற்றுப் பிரிய மனமில்லாமல் பிரிந்து, வீடு சென்றாள்.

மேற்கண்டபடி, மயனூர் ஆட்கொண்டான் கோயிற் பட்டர் சதாசிவ அய்யர் மகள் சரஸ்வதிக்கும், அதே கோயில் தேவஸ்தான ஆபீஸ் ஹெட்-கிளார்க் ரெங்கசாமி நாயுடுவின் மகன் தாமோதரத்திற்கும் சம்பாஷணை நடந்தது. இவர்களிருவரின் குடும்பங்களுக்கும் ஏற்பட்ட நெருங்கிய நட்பே இவர்களது காதலுக்கும் காரணமாயிருந்தது. இந்தக் காதல் வெகு நாளாய் நிலைத்திருக்கவில்லை. இவர்களின் காதல் நாடகத்தை அறிந்தார், சதாசிவப் பட்டர். உடனே தம் மகள் சரஸ்வதியை வினைதீர்த்தபுரிகோயிற் பட்டர் பத்மநாத அய்யர் மகன் கிருஷ்ண மூர்த்திக்கு மணம் முடித்து அவர்களைத் தம் வீட்டோடே வைத்துக்கொண்டார்.

* *

எங்கும் கும்பிருட்டு. ஒரே அந்தகாரமாகச் சூழ்ந்திருந்தது. வான வீதியிலே இரண்டொரு வௌவால்கள் பறந்து சென்றன. எங்கிருந்தோ வந்த ஒரு ஆந்தையின் அலறல் இரவின் அமைதியைக் குலைத்தது.

அவ்வேளையிலே யாரோ ஒருவன் முறுக்கிய மீசையுடன் மிடுக்கான நடைபோட்டு வந்து, சதாசிவப் பட்டரின் வீட்டுக் கதவைத் தட்டினான். அய்யர் வீட்டிலிருந்தபடியே கதவைத் திறக்காமலே ''யார்டா, அது?'' என்று கேட்டார்.

''நான்தான், சாமி! குளத்துப் பட்டிக் கோடாங்கி பெருமாள் நாயுடுங்க''

பட்டர் கதவைத் திறந்து அவனைத் தம் வீட்டினுள் கூட்டிப் போனார். சிறிது நேரம் இருவரும் ஏதேதோ 'கசு மிசு' என்று பேசிக் கொண்டிருந்தனர். பின்பு வந்த ஆள் திரும்ப வீட்டுக்குப் புறப்பட்டான்.

''என்னடா, பெருமாள்! நான் சொன்னபடி செய்துடு. உனக்கு நூறு ரூபா சொளையாக் குடுத்துடுறேன். நீ மட்டும் காரியத்தைச் சீக்கிரமே சாதிச்சுடு. அப்புறம் என்னிட்டே வா. என்ன, நான் சொல்றது புரிஞ்சுதா?''

''சரிங்க, சாமி!''

சதாசிவப் பட்டரின் வீட்டுக்கு வந்த ஆள் இருளில் எங்கோ மறைந்து விட்டான்.

* *

அன்று குளத்துப்பட்டியில் கோடாங்கி பெருமாள்சாமி நாயக்கர் சாமி வந்து 'திங்கு, திங்கு' என்று ஆட்டம் போட்டார், அந்த ஊர்ப் பாமர மக்களெல்லோரும் ஓடிவந்து ஆடு, கோழி முதலியவைகளைப் பலியிட்டுப் பணிந்து கும்பிட்டனர். எனினும் சாமி நிற்கவில்லை; முன்னைவிடப் பலமாகவே குதித்து ஆடியது.

அந்தஊர்க் கிழங்களெல்லாம் ஒன்றாய்க்கூடி ''சாமி! உங்களுக்கு என்ன குத்தம் செஞ்சுருக்கோம்? அப்பிடிச் செஞ்சிருந்தாலும் மன்னிச்சுடணும்'' என்று அவன் காலில் விழுந்து கெஞ்சினர்.

''நான் யாருண்ணு தெரியுமாடா?''

''தெரியலைங்களே, சாமி!''

''நான்தாண்ட உமாதேவி. என் பர்த்தா ஆட்கொண்டாருக்கு மட்டும் கோயில் கட்டிக் கும்பிடுறீங்களே. எனக்கு ஏண்டா கட்டவில்லை? எனக்கு இந்த ஊர்லே ஒரு பெரிய கோயில் கட்டி என்பர்த்தாவின் கோயில் பட்டர் மருமகன் கிருஷ்ண மூர்த்தியைப் பூசாரியாப் போடணுண்டா. இல்லாட்டி இந்த ஊரையே நாசமாக்கிப் போடுவேண்டா''

''சாமி! கோவப்படாதீங்கோ. அப்படியே செய்துடுறோம்''

இவ்வாறு பெருமாள் கோடாங்கி சாமியாடிப்பேச மக்கள் எல்லோரும் அவன் ஏமாற்று வலையில் விழுந்து அவன் சொன்னபடி செய்ய ஒப்புக் கொண்டனர். பெருமாள் நாயக்கன் மேல் வந்தசாமியும் மலையேறி விட்டது. பெருமாள் நாயக்கனும் ரூபாய் நூறுபெற சதாசிவப் பட்டரிடம் சென்றான்.

* *

ஒரு வருடத்திற்கெல்லாம் குளத்துப்பட்டியில் உமாதேவிக்கு ஒரு பெரிய ஆலயம் எழுந்து விட்டது. கோவில் கும்பாபிஷேகத்தையும், பிரதிஷ்டையையும் சதாசிவப் பட்டரே நடத்தி வைத்துத் தம் மருமகனையே பூசாரியாகவும் நியமித்தார். இவ்வளவும் சதாசிவப் பட்டரின் சைங்கரியம் என்பதை அப்பாமர மக்கள் எங்ஙனம் அறிவர்? அறிந்தவர்தானே அது ஆரியத்தின் பரம்பரைக் குணம் என்பதனை அறிவர்!

# பெண்கள் சுதந்தரம்

கேள்வி:— பெண்களுக்குப் புருஷர்கள் என்றைக்குச் சுதந்தரம் கொடுப்பார்கள்?

விடை:—கற்பு என்கிற வார்த்தையும், விபசார தோஷம் என்கிற வார்த்தையும் என்று ஒழிக்கப்படுகின்றதோ, அன்றுதான் பெண்கள் முழு விடுதலையடையமுடியும்.

இன்று பெண்களிடம் புருஷர்கள் முழு விடுதலையும் பெற்றிருப்பதற்குக் காரணம், ஆண்கள் தங்களுக்குள் கற்பு என்பதையும், விபசாரதோஷம் என்பதையும் அடியோடு ஒழித்துவிட்டதாலேயே சட்டப்படி முழு விடுதலையும் பெற்றிருக்கின்றார்கள்.

ஆதலால் பெண்கள் விடுதலைபெற வேண்டுமானால் ஆண்களைப்போல் நடக்கவேண்டும். மற்றபடி அப்படிக்கில்லாமல், ''புல் என்றாலும் புருஷன். கல் என்றாலும் கணவன்'' என்றோ; ஆண்கள் தங்கப் பாத்திரம், அதை யார் தொட்டாலும் கழுவக்கூடவேண்டியதில்லை, துடைத்துவிட்டால் போதும்; பெண்கள் மண் பாத்திரம், அதை யாராவது தொட்டால், கழுவினால்கூடத் தீட்டுப் போகாது, அதை உடைத்துக் குப்பைத்தொட்டியில் எறிந்தாகவேண்டும் என்கின்ற முறை இருக்கின்றவரை பெண்களுக்கு விடுதலையோ, சுதந்தரமோ கிடையாது. ஆதலால் பெண்களும் தங்களை மண் சட்டி என்று எண்ணாமல், தாங்கள் தங்கப்பாத்திரம் என்று எண்ணிக் கொள்ளவேண்டும். ஈ. வெ. ரா.

## வரப்பெற்றோம்.

தமிழர் நாடு பொங்கல் மலர்.
டிம்மி 1/4 பக்கம் 24. விலை அணா 0—4—0
45 மணியக்காரத் தெரு திருச்சி.

திராவிடமணி பொங்கல் மலர்.
டிம்மி 1/4 பக்கம் 50. விலை அணா 0—8—0
தெப்பக்குளம் திருச்சி.

திராவிட நாடு பொங்கல் மலர்.
டிம்மி 1/4 பக்கம் 28 விலை அணா 0—2—0
95. திருக்கச்சி நம்பி தெரு காஞ்சீவரம்.

திராவிடன் பொங்கல் மலர்.
டிம்மி 1/4 பக்கம் 88 விலை ரூபாய் 1—0—0
6. சுங்குராம செட்டி தெரு சென்னை.

நிலவு பொங்கல் மலர்.
கிரவுன் 1/4 பக்கம் 28 விலை அணா 0—6—0.
6. அரிமுத்து ஆச்சாரி தெரு சென்னை. 5.

## எங்களிடம் கிடைக் கும் நூல்கள்.

### குடி அரசு பதிப்பக வெளியீடுகள்.

| | | | |
|---|---|---|---|
| தத்துவவிளக்கம் | 0 | 12 | 0 |
| புராணங்கள் | 0 | 8 | 0 |
| ராவணப்பெரியார் | 0 | 8 | 0 |
| புதுரஷ்யா | 0 | 8 | 0 |
| இந்தியாவின் குறைபாடுகள் | 0 | 8 | 0 |
| இரணியன் அல்லது இணையற்ற வீரன் | 0 | 8 | 0 |
| பெரியார் ஈ. வெ. ரா. வாழ்க்கை வரலாறு. (ஆங்கிலம்) | 0 | 8 | 0 |
| நமக்கு வேண்டியது எது? சமதர்ம ராஜ்யமா? சுயராஜ்யமா? | 0 | 6 | 0 |
| பெரியார் பெருந்தொண்டு | 0 | 6 | 0 |
| கர்ப்ப ஆட்சி | 0 | 6 | 0 |
| வெளியேறு | 0 | 6 | 0 |
| மெய்ஞ்ஞானமுறையும், மூடநம்பிக்கையும் 2ம் பாகம் | 0 | 5 | 0 |
| பகுத்தறிவு அல்லது மரணசாஸனம் 2ம் பாகம் | 0 | 4 | 0 |
| பொதுவுடைமைத் தத்துவங்கள் | 0 | 4 | 0 |
| புராண ஆபாசங்கள் (தருமபரீட்சை) | 0 | 4 | 0 |
| மதப்புரட்சி | 0 | 4 | 0 |
| வால்டையரின் வாழ்க்கைச் சரிதை | 0 | 4 | 0 |
| கார்ல் மார்க்ஸ் | 0 | 4 | 0 |
| சமதர்ம உபன்யாசம் | 0 | 4 | 0 |
| இலங்கை உபன்யாசம் | 0 | 3 | 0 |
| இராமாயணப் பாத்திரங்கள் | 0 | 3 | 0 |
| மேல்நாடும், கீழ்நாடும் | 0 | 3 | 0 |
| அப்பரும் திருஞான சம்பந்தரும் | 0 | 3 | 0 |
| சோஷியலிசம் | 0 | 3 | 0 |
| இவ்வுலகம் இல்லை? | 0 | 3 | 0 |
| இன இழிவு ஒழிய இஸ்லாமே நன் மருந்து! | 0 | 2 | 0 |
| இதிகாசங்கள் புகட்டும் நீதி | 0 | 2 | 0 |
| உண்மைத் தொழிலாளி யார்? | 0 | 2 | 0 |
| திருச்சிப்பிரசங்கம் | 0 | 2 | 0 |
| ராமலிங்க சுவாமி பாடல் | 0 | 2 | 0 |
| பெண்கள் அலங்காரப் பொம்மைகளா? | 0 | 1 | 0 |
| காங்கரஸ் திராவிடனுக்கு விண்ணப்பம் | 0 | 1 | 0 |
| தமிழ் இசை-நடிப்புக் கலைகள் | 0 | 1 | 0 |
| ஜஸ்டிஸ் கட்சிக்குக் கிராக்கி, புதுக்கட்சியா? | 0 | 1 | 0 |
| உழைப்பாளிக்கு ஏன் சமதர்ம கீதம் | 0 | 1 | 0 |
| திராவிடர்-ஆரியர் உண்மை | 0 | 0 | 6 |

நாதன் கம்பெனி லிமிடெட்,
கச்சேரி வீதி, ஈரோடு.





## விற்பனைக்குத் தயார்!

அர்ச்சுனன் நிலைய வெளியீடு.

புரட்சி முரசு, விலை அணா 12.

புரட்சிக் கருத்துக்களைக் கொண்ட எழுச்சிப்பாக்களாக இருக்கின்றன.
—பெரியார்.

மக்கள் ஆட்சி விலை அணா 4.

மக்கள் ஆட்சி, படிப்பவர் மனதைப் பறிக்கும் நிலையில் உள்ளது.
—C. N. A.

வேண்டுவோர் எழுதவும்.

புதுமை நிலையம்,
வடக்குத்தெரு, கொடுமுடி.

விரைவில் வெளிவரும்.

## "ஈரோடு வாசி"

(வார வெளியீடு)

ஆசிரியர்:

P. ஷண்முகவேலாயுதம்.


Edited, Printed and Published by N. Karivaradaswamy at the Tamilian Press 42, Cutchery street, ERODE.